பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 13 வெள்ளிக்கிழமை 26.03.2021 கதிர் 141

இது ரகசியம் அல்ல!

இந்தியா தொடர்பான இலங்கையின் நடவடிக்கைப்போக்கு, அரசியல் அவதானிகளை ஆச்சரியத்தில் மூழ்கடித்திருக்கின்றது.

இதுவிடயத்தில் அரசின் போக்கை ஜெ.மு. என்றும், ஜெ.பி. என்றும் பார்க்க வேண்டியிருக்கின்றது. அது என்ன ஜெ.x.

பக்கம்02

# யாழ்.மாநகரின் மத்திய பகுதியை 10 நாள்களுக்கு முடக்கத் தீர்மானம்

## நேற்றைய கூட்டத்தில் முடிவு



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக யாழ்ப்பாணம் நகரத்தின் மத்திய பகுதியை இன்றிலிருந்து 10 நாள்களுக்கு முடக்கத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற விசேட கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

2

## யாழ். நகரில் முடக்கப்பட்ட பகுதி




– நகரத்தில் முடக்கப்பட்ட பகுதிகளின் எல்லை.

## யாழில் நேற்று மாத்திரம் 79 பேருக்கு கொரோனா!

### வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் 79 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 80 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப் பட்டது.

இந்தத் தொற்றாளர்களில் 66 பேர் யாழ். மாநகர மத்தி நவீன சந்தைப் பகுதியில் அடையாளம் காணப் பட்டனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் போதனா 2

## ஜெனிவா தீர்மானத்தை நிராகரித்தது இலங்கை

### உள்ளகப் பொறிமுறையே ஏற்பு; நாடாளுமன்றில் அரசு அறிவிப்பு




ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் சகல நிறுவனங்களுடன் தொடர்ச்சியாக இணைந்து செயற்படுவதாக அரசு நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளது.

இலங்கை இறைமை 2

### கொரோனா அபாயத்தால்

## தனியார் வகுப்புகளுக்கு யாழ்.குடாநாட்டில் தடை!

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

சடுதியாக அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் நிலை காரணமாக யாழ். குடாநாட்டில் தனியார் கல்வி நிலையங்களுக்கு மறு அறிவித்தல் வரும் வரை தடை விதிக்கப் பட்டுள்ளது என மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட கொரோனா செயலணி நேற்று மாலை மாவட்ட அரச அதிபர் தலைமையில் கூடியது. அந்தக் கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 11

### தீர்மானத்தை அமுல்படுத்த செலவாகும் நிதியில்

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுங்கள்

### ஐ.நாவிடம் கோருகின்றது இலங்கை

இலங்கை மீதான ஐ.நா. தீர்மானத்தை அமுல்படுத்தும் நிதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்கலாம் என்று வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்தன 11

## மேலும் மூவர் மரணம்; கொரோனா காவு 557

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மேலும் மூவர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பசறை பிரதேசத்தைச் சேர்ந்த, 79 வயதான ஆண் ஒருவரும், நிரிஎல்ல பிரதேசத்தைச் 11

## கைதியைப் பார்க்க அனுமதி கஜேந்திரன் எம்.பிக்கு மறுப்பு

காலி தங்காலையில் உள்ள சிறைச்சாலைக்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனுக்குக் கைதிகளை பார்வையிட அனுமதி மறுக்கப் பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் காலி மாவட்டம் தங்காலையில் அமைந்துள்ள சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளைப் பார்வையிடுவதற்காக சென்றிருந்தார். எனினும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்களை உறவினர்கள் மட்டுமே பார்வையிட முடியும் என்று கூறி கைதிகளை 11

## போர்க்குற்றம் புரியவில்லையெனில் ஏன் விசாரணைக்குப் பயப்படுகின்றீர்?

### அரசிடம் சிறிதரன் எம்.பி. கேள்வி



இராணுவமும் அரசும் தமிழ் மக்கள் மீது கொலைகளையும் குற்றங்களையும் புரியவில்லை என்றால், அநீதிகளை இழைக்கவில்லை என்றால் ஏன் பயப்பட வேண்டும்? விசாரணைக்கு முகம் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் ஜெ.பி. என்பது?

ஜெனிவாவுக்கு முன்னர், ஜெனிவாவுக்குப் பின்னர் என்பதுதான் அது.

கடந்த செவ்வாய் மாலை ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் கூட்டத்தில் இலங்கை தொடர்பான பிரேரணை மீதான வாக்கெடுப்பு நிறைவேற்றப்பட்ட கையோடு இலங்கையின் போக்கும் மாறிவிட்டமை ஆச்சரியத்துக்குரியது.

கடந்த ஜனவரி மாதம் 18ஆம் திகதி நெடுந்தீவில் இந்திய மீனவர் படகும் இலங்கைக் கடற்படைப் படகும் மோதி விபத்துக்குள்ளான சம்பவத்தில் நான்கு இந்திய மீனவர்கள் உயிரிழந்தனர். அதற்குப் பின்னர் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேல் இலங்கைக் கடற்படை இந்திய மீனவர் பக்கமே திரும்பவில்லை. அவர்களின் அத்துமீறலைக் கண்டும் காணாமலும் பார்த்து இருந்தது.

ஆனால், கடந்த செவ்வாய் மாலை ஜெனிவா ஆட்டம் முடிந்ததும் – அதில் கொழும்புக்கு ஆதரவாக புதுடில்லி வாக்களிக்காத நிலையில் – அடுத்த நாள் இரவே இலங்கைக் கடற்படை தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கியது.

நெடுந்தீவு, இரணைதீவு மற்றும் முல்லைத்தீவுப் பகுதியில் புதனிரவு ஒரே சமயத்தில் ஐந்து இந்திய மீனவர் படகுகள் மடக்கப்பட்டு 54 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இப்படி முன்னரே திட்டமிட்ட மாதிரி ஏற்பாடு செய்து, ஒரே சமயத்தில் ஒருங்கிணைத்து இக்கைது நடவடிக்கை நடந்தேறியிருக்கின்றது.

அது மாத்திரமல்ல, இம்முறை இவ்விடயத்தை இலங்கை கையாண்ட முறைமையும் இந்தியத் தரப்பை ஆச்சரியத்துக்குள்ளும் அதிர்ச்சிக்குள்ளும் ஆழ்த்தியதாகத் தெரிகின்றது.

வழமையாக இப்படி மீனவர்கள் கைது செய்யப்படும் போது துணைத் தூதரகத்தின் அதிகாரிகள் உடனடியாக அந்த மீனவர்களைச் சந்திக்கவும், அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களைக் கையளித்து, தூதரகத்தின் பங்களிப்பு உதவி இருப்பது பற்றிய தகவலை அவர்களுக்குத் தெரியப்படுத்தி தெம்பூட்டவும் அனுமதிக்கப்படுவர்.

ஆனால், அதற்கு இம்முறை அனுமதி மறுக்கப்பட்டது. கொரோனா என்பதால் பதினான்கு நாள்கள் தனிமைப்படுத்தல் காலம் முடிந்த பிறகு, தேவையானால் சந்திக்கலாம் எனக் கூறப்பட்டது.

அதனால், வழமைக்கு மாறாக இம்முறை, மீனவர்கள் கைதாகி பன்னிரண்டு மணித்தியாலத்துக்குள் அவர்களுக்கு தூதரக சேவை கிட்டுவதன் அவசியத்தை வலியுறுத்தி, கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் அறிகைக ஒன்றை வெளியிட வேண்டியதாயிற்று.

ஜெனிவாத் தீர்மானம் நிறைவேறும் வரை –

★ தமிழக மீனவர்களைக் கைது செய்து இந்தியாவைச் சீண்ட கொழும்பு விரும்பவில்லை.

★ அதிகாரப் பகிர்வின் அம்சமாக 13ஆவது திருத்தத்தின் கீழான மாகாண சபைகளுக்கு விரைந்து தேர்தலை நடத்துமாறு புதுடில்லி ஜெனிவாவில் கோரிய போது அதற்கு இணங்குவதாக பிரதிபலிப்புக் காட்டியது இலங்கை.

ஆனால், அந்த விடயத்திலும் ஜெனிவாத் தீர்மான வாக்கெடுப்பை அடுத்து கொழும்பு குத்துக்கரணம் அடித்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

இதற்கு முன்னர், மாகாணசபைத் தேர்தல்களை விரைந்து நடத்துங்கள் என்று புதுடில்லி கோரியபோது, இதோ ஜூனில் தேர்தல், ஜூலையில் தேர்தல், ஓகஸ்டில் தேர்தல் என்றெல்லாம் பிரதிபலிப்புக் காட்டியது கொழும்பு.

இப்போது வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமையன்று விசேட நாடாளுமன்ற அமர்வு ஒன்றை கோட்டா அரசு ஏற்பாடு செய்துள்ளது. வழக்கமாகத் திங்களன்று நாடாளுமன்ற அமர்வு இடம்பெறுவதில்லை. ஆனால் அடுத்த மாத முற்பகுதியில் இது நடக்கின்றது. ஏன் தெரியுமா?

மாகாண சபைத் தேர்தல்களை என்ன முறைமையில் நடத்துவது என்பது குறித்து ஆராய்ந்து நாடாளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவைத் தெரிவு செய்வதற்குத் தான் அந்த விசேட அமர்வு.

பிறகென்ன...? நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைத்து என்ன முறைமையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது என்று ஆராயப்பட்டால், அடுத்த இரண்டு வருடங்களுக்குத் தேர்தல் இல்லவேயில்லை என்பதுதானே அர்த்தம்...? மலையைக்கெல்லி எலியைப்பிடிக்கும்வேலையை ஆரம்பித்து விட்டார்கள், இனி தேர்தல் முறைமை எப்படி என்று தீர்மானிப்பதற்கே இரண்டு வருடங்களாகும் என அடித்துக் கூறலாம்.

எனவே மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துவோம் என்ற சாரப்பட ஜெ.முன் வெளிப்படுத்திய பிரதிபலிப்புகளை இப்போது ஜெ.பின் தலைகீழாக்கி விட்டது கொழும்பு.

இரண்டாம் கட்ட கொரோனாத் தடுப்பூசி வழங்கும் விடயத்திலும் இந்தியா தங்கள் காலைவாரிவிட்டது என்ற சினமும் கொழும்புக்கு உள்ளது.

ஆகவே, இவற்றின் விளைவுகளாக கொழும்பு – புதுடில்லி உறவுகளை சீர்கெடுக்கும் இன்னும் பல விடயங்களை அடுத்தடுத்துக் கட்டவிழும் என இனி எதிர்பார்க்கலாம்.

எது, எப்படி என்றாலும், தமிழகத் தேர்தல் நெருங்கி வரும் சமயத்தில் – அதற்கு இன்னும் பத்து நாள்களே இருக்கையில் – இப்படி கூண்டோடு இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படை வாரிச் சுருட்டி அள்ளி தடுப்பில் போட்டது தமிழகத் தேர்தலில் ஆளும் அ.தி.மு.க. – பாரதீய ஜனதாக் கட்சிக் கூட்டுக்கு இக்கட்டைத் தரும் வேலை என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

கொழும்பின் இந்தத் திமிர்த்தனத்தை புதுடில்லியும், சென்னையும் எப்படிக் கையாளப்போகின்றன? பொறுத்திருந்து பார்ப்போம்.

– மின்னல் –

## ஜெனிவா தீர்மானத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொண்ட நாடாகும். அந்த நிலையைத் தொடர்ச்சியாகப் பாதுகாப்பதே அரசின் எதிர்ப்பார்ப்பாகும் என்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விசேட அறிக்கையொன்றை விடுத்து உரையாற்றினார்.

இந்தத் தீர்மானம் தேவையற்ற ஒன்றாகும். இது இலங்கை சட்டத்துக்கு முரண்பட்டதாகும் என்று குறிப்பிட்ட அமைச்சர், இந்தத் தீர்மானத்துக்கு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் பெரும்பான்மை கிடைக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

தீர்மானம் தொடர்பான விவரங்கள் அடங்கிய ஆவணங்களை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு பொறுப்புக்கூறல் விடயத்தை உள்ளூர் பொறிமுறையின் ஊடாக முன்னெடுக்கும். தனிஈழ நாட்டை இலங்கையில் கட்டியெழுப்பும் முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய சிலர் தற்போது அதனை வேறு ஒரு விதத்தில் முயற்சிக்கின்றனர்.

விடுதலைப்புலிகள் அன்று மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் குறித்து அன்று எவரும் குறிப்பிடவில்லை. இவர்கள் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரைக் கொலை செய்ய முயற்சித்தனர். எதிர்த்தரப்பில் பலரைக் கொன்றனர். உள்ளூரில் மாத்திரமன்றி இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியையும் கொலை செய்தனர். ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பைச் சேர்ந்த பலரைக் கொலை செய்தனர். ஆனால், அவர்கள் தற்போது மௌனம் காக்கின்றனர்.

முப்பது வருட கால போரை முடிவுக்குக் கொண்டு வந்து நாடு பிளவுபடுவதை இராணுவத்தினர் தடுத்து மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபை எந்த வித அடிப்படையும் இன்றி இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்காக மேற்கொள்ளும் முயற்சியை நிராகரிக்கின்றோம்.

அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை முன்னெடுத்து மக்களின் மனித உரிமைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைப் பாதுகாப்பதற்கு சமகால அரசு செயற்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் இலங்கைக்கு எதிராகச் சமர்ப்பித்த அறிக்கையை இரண்டாகப் பிரித்து பார்க்க முடியும். விடுதலைப்புலிகள் அமைப்புடன் இடம்பெற்ற மோதலில் அந்த அமைப்பு தோல்வியடைந்த காலப்பகுதியில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் உயிரிழப்புக்கள் குறித்து விசாரணை செய்வதில் உள்ள முரண்பாடுகள் மற்றும் கடந்த அரசை தோல்வியடையச் செய்து நாட்டின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மையைப் பாதுகாப்பதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நிர்வாகத்தால் முடிந்துள்ளமை விசேட அம்சமாகும்.

நாடொன்றில் உலக விடயங்கள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கருத்துத் தெரிவிக்க முடியாது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசை சீர்குலைக்கும் வகையில் எதிர்க்கட்சியினர் முன்வைத்த விடயங்கள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கைக்குப் பின்புலமாக அமைந்தது. இவர்கள் ஒன்றிணைந்த வகையில் செயற்பட்டுள்ளமை தெளிவாகின்றது.

நாட்டின் சுகாதார நிலைமையைப் பாதுகாப்பதற்காக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை அறியாமல் அது தொடர்பாக மனித உரிமைகள் ஆணையாளர் அறிக்கையிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் நாடுகள் மத்தியில் இலங்கை முன்னிலையில் காணப்படுகின்றது. இருப்பினும் அது தொடர்பாக அறியாமல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கடந்த அரச காலத்தில் மாகாண சபை முறைமையில் திருத்தத்தை மேற்கொள்வதற்காக சட்ட திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது திருத்தம் தொடர்பில் வாக்களிப்பை நடத்துவதற்கு முடியாத நிலை ஏற்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மற்றும் முன்னாள் பிரதமருக்கு இடையில் இருந்து வந்த கருத்து முரண்பாடுகள் காரணமாக நாடு மேலும் சிக்கலான நிலைக்குத் தள்ளப்பட்டது. இதற்கு அமைவாக மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் உயர்நீதிமன்றம் வரையில் விடயங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதனைச் சரி செய்வதற்கு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவுக்குத் தெளிவான மக்கள் ஆணை கிடைத்தது – என்றார்.

## போர்க்குற்றம் புரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொடுக்கலாம்தானே?

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உங்கள் மடியில் கனதி இருப்பதனால் தான் இதற்கு எதிராக நீங்கள் குரல் கொடுக்கின்றீர்கள். நீங்கள் போர்க்குற்றம் செய்யவில்லை என்றால் ஒரு பகிரங்க விசாரணைக்குத் தயாராகுங்கள் எனவும் அவர் அழைப்பு விடுத்தார்.

இலங்கையில் இடம்பெற்ற இன அழிப்பு உண்மைகளை தேசிய ரீதியில் கண்டறிய முடியாது. எனவே, இவ்விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல வேண்டும் எனவும் சிறிதரன் எம்.பி. தெரிவித்தார்.

ஐ.நா. தீர்மானம் தொடர்பில் இந்தியா நடுநிலைமை வகித்திருந்தாலும் இந்தியா இம்முறை கனதியான செய்தியை இலங்கைக்கு சொல்லியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலகம் வெட்கித்தலைகுனியக்கூடிய அளவுக்கு இலங்கையில் ஒரு பாரிய இன அழிப்பு நடைபெற்றது. எனவே, இவ்விடயத்தில் சர்வதேசம் தீவிரமாக ஈடுபட வேண்டும். இவ்விடயம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும். அங்கு இது விசாரிக்கப்பட வேண்டும். தமிழர்களின் அபிலாஷை அது தான்.

ஏனெனில் இந்த நாட்டில் உங்களிடம் இருந்து நீதி கிடைக்கவில்லை. நீங்கள் நீதியாக நடத்தவும் தயார் இல்லை. தற்போதைய ஜனாதிபதி பதவியேற்ற பின்னர் அவர் உரையாற்றிய பல இடங்களில் இந்த நாட்டில் ஒரு தமிழினம் இருப்பதாக, அவர்களுக்கு ஒரு பிரச்சினை இருப்பதாகக் கூறியதுமில்லை. ஏற்றுக்கொண்டதுமில்லை.

அவரின் கிராமமட்ட சந்திப்புக்கள் கூட இதுவரை வடக்கிலோ அல்லது கிழக்கிலோ நடந்ததுமில்லை. இந்த நாடு ஓர் இனவாத சகதிக்குள் மூழ்கிப்போயுள்ளது. அமைச்சர்கள் இனவாதத்தை கக்குகின்றார்கள். இந்த நாடு இனவாதத்தால் அழியப் போகின்றது.

சர்வதேசத்தின் பிடிக்குள் இந்த நாட்டை கொண்டு செல்ல நீங்கள் தயாராகிவிட்டீர்கள். எனவே, சர்வதேச விசாரணை வேண்டும் என்பதும் எமக்கு தீர்வு கிடைக்க வேண்டும் என்பதையே நாம் வலியுறுத்துகின்றோம் – என்றார்.

## யாழ்.மாநகரின் மத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கூட்டத்தில் சுகாதாரத் துறையினர், படையினர் மற்றும் வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்றனர். .

இதன் பிரகாரம் யாழ்ப்பாணம் மாநகரின் மத்திய பகுதியை முடக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதனால் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் உடனே கோட்டை மற்றும் புதிய பஸ் நிலையப் பகுதிக்கு தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளது.

மின்சார நிலைய வீதி முழுமையாகவும், கே.கே.எஸ். வீதி சத்திரச்சந்தியிலிருந்து முட்டாஸ் கடைச் சந்தி ஊடாக பண்ணை வரையான பகுதிகளுடன் வைத்தியசாலை வீதியில் பூபாலசிங்கம் புத்தக கடையில் இருந்து சமிக்கை சந்தியை தாண்டி சிவன் – பண்ணை வீதி வரையும் மூடப்படும். இதேபோன்று பழைய தபால் கந்தோர் வீதியும் மூடப்படும்.

யாழ்ப்பாணம் மாநகரில் பாடசாலைகளில் தொற்று அடையாளம் காணப்பட்ட மாணவர்கள் பயிலும் வகுப்புகள் மட்டும் 10 நாள்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மேலும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மண்டபங்களில் திருமண நிகழ்வுகள், ஏனைய நிகழ்வுகள், கூட்டங்கள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன.

வீடுகளில் சுகாதார மருத்துவ அதிகாரியின் அனுமதியுடன் நிகழ்வுகள் நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தோரின் இறுதிக் கிரியைகளில் 25 பேர் மாத்திரம் பங்கேற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகரில் மூடிய பகுதிகளுக்குள் உள்ள கடை உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்பட வேண்டும். அதன் பின்பு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டு கொரோனாத் தொற்று இல்லை என உறுதி செய்த பின்னரே வர்த்தக நிலையங்கள் திறக்க அனுமதிக்கப்படும் என்று நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## யாழில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைத்தியசாலை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வு கூடங்களில் 677 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போதே, 80 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 77 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இவர்களில் 11 பேர் ஏற்கனவே தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் என சுயதனிமைப்படுத்தப்பட்டவர்கள்.

யாழ்ப்பாணம் மாநகரில் நவீன சந்தை உள்ளிட்ட கடைத் தொகுதிகளில் பணியாற்றும் 66 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

தெல்லிப்பழை வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்குத் தொற்று கண்டறியப்பட்டது.

முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் ஒருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர் கொரோனா அறிகுறிகளுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர் – என்றார்.

## பசறை பஸ் விபத்து:

# வீதி அபிவிருத்தி அதிகாரசபை தவறிழைத்திருந்தால் நடவடிக்கை!

### என்கிறார் அமைச்சர் கெஹலிய

பதுளை - பசறை பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்து தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை தரப்பில் தவறிழைக்கப்பட்டிருந்தால் பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்களால் இது தொடர்பில் கேட்கப்பட்ட போது அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்தார்.

விபத்து தொடர்பில் பஸ் மற்றும் எதிர்த்திசையில் பயணித்த லொறி சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை, குறித்த வீதி முழுமையாகப் புனரமைக்கப்படவில்லை என்றும், வீதியோரத்தில் காணப்பட்ட பாரிய கற்பாறை அகற்றப்படவில்லை என்றும் இதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையே பொறுப்புக் கூற வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இரு தரப்பு தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. விசாரணைகளின் மூலம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் தவறுகள் ஏற்பட்டிருப்பின் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டிய அதிகாரிகளுக்கு



எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல மேலும் தெரிவித்தார்.

இதன் போது குறித்த விபத்தின் பின்னர் தேய்வடைந்த டயர்களை மாற்றாமல் பிரயாணம் செய்யும் வாகனங்கள் தொடர்பில் பொலிஸாரால் சோதனைகள் முன்னெடுக்கப்படுகிறது. எனினும் தற்போது நாட்டில் டயர் தட்டுப்பாடு நிலவுகிறதோ என்று ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, இந்த விடயத்தைக் கருத்திற்கொண்டு தற்காலிகமாக இந்த சோதனை நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், இதற்கு விரைவில் தீர்வு வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

# பேராயரின் நடவடிக்கைகளை முடக்குவதற்கு முயற்சிகள்!

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன்தொடர்புடையவர்களை ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னர் கைது செய்ய வேண்டும் என்பதற்காக, காரணங்கள் எவையுமின்றி பலரும் கைது செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். பேராயர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை முடக்குவதற்காகவே இவ்வாறான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னர் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்வதாகக் கூறி வெவ்வேறு நபர்கள் கைது செய்யப்படுகிறார்கள். எவ்வித காரணமும் இன்றி பலரை கைது செய்கின்றனர். பேராயரால் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை முடக்குவதற்காக இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதே போன்று மாகாணசபைத் தேர்தல்கள் தொடர்பிலும் முரண்பட்ட கருத்துக்களை அரசாங்கம் முன்வைத்துக் கொண்டிருக்கிறது. மாகாணசபைத் தேர்தல்கள் தொடர்பில் ஜெனிவாவில் ஏற்பட்ட நெருக்கடியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக தற்போது நல்லாட்சி அரசாங்கத்தின் மீது பழி சுமத்துகின்றனர். அரசாங்கத்தின் இவ்வாறான போலி செயற்பாடுகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி அதன் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுக்கும்.

ஜனாதிபதியின் 'நதிகளைப் பாதுகாப்போம்' வேலைத்திட்டத்தின் மூலம் எதிர்காலத்தில் எவ்வாறான கேலி நாடகங்கள் அரங்கேற்றப்படவுள்ளன என்பதை அறிய விரும்புகின்றோம். அரசாங்கத்தின் சகாக்களுக்கு இந்த வேலைத்திட்டம் கையளிக்கப்பட்டுள்ளதாகவே தகவல்கள் கிடைத்துள்ளன. இந்த வேலைத்திட்டம் உண்மையில் நதிகளைப் பாதுகாப்பதற்காகவா அல்லது அதற்கு அருகிலுள்ள சுற்றுச்சூழலை அழியவடைச்செய்வதற்கா? இவ்வாறான வேலைத்திட்டங்கள் மூலம் மீண்டும் சுற்றாடல் சீரழிவுகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. - என்றார்.

# புர்கா தடை தொடர்பில் பேச்சுத் தொடர்கின்றது!

### கெஹலிய தெரிவிப்பு

புர்கா தடை தொடர்பாகப் பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன. இதுவரையில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை. இந்த விடயத்தை மதரீதியானதாக மாத்திரம் அவதானிக்கக் கூடாது. தேசிய பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டு அவதானிக்க வேண்டும் என்று அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

புர்கா தடை விவகாரத்தை மத ரீதியான விடயமாக மாத்திரம் பார்க்கக் கூடாது. தேசியப் பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டு அவதானிக்க வேண்டும். ஐந்து நட்சத்திர ஜனநாயக நாடுகள் கூட புர்காவிற்கு தடை விதித்துள்ளன. அவ்வாறான நாடுகள் தேசியப் பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டே இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளன.

உலகில் இதுவரையில் 16 நாடுகள் புர்காவிற்குத் தடை விதித்துள்ளன. அவற்றில் 3 முஸ்லிம் நாடுகளும் உள்ளடங்குகின்றன. எனவே, இது இலங்கையில் மாத்திரம் வரையறுக்கப்பட்டதொன்றல்ல. எவ்வாறிருப்பினும் இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் தொடர்ந்தும் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகிறது.

ஆரம்ப காலங்களில் முகத்தை முழுமையாக மறைக்கும் வகையிலான ஆடை கலாசாரம் காணப்பட்டது. எனினும் தற்போது கலாசார மாற்றத்துடன் அவற்றிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே இது தொடர்பில் சுமுகமான நடவடிக்கைகள் நிதானமாக முன்னெடுக்கப்படும். - என்றார்.

# இலங்கை மீதான தொடர்ச்சியான கண்காணிப்பிற்கு கனடா உதவும்!

### என்கிறார் மார்க் கார்னியோ

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை வரவேற்கும் அதேவேளை அங்கு இடம்பெற்றுவரும் மனித உரிமைகள் தொடர்பான ஐ.நாவின் கண்காணிப்பு நடவடிக்கைக்கு உதவுவதாக கனடா அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் மார்க் கார்னியோ அறிக்கை ஒன்றை வெளியிட்டு மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும் குறித்த பிரேரணை இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை உறுதிப்படுத்த சர்வதேசசமூகத்தின் தொடர்ச்சியான ஆதரவை பிரதிபலிக்கிறது என கூறியுள்ளார்.

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக சபை உறுப்பினர்களுடன் இணைந்து கனடா பணியாற்றியது என்றும் மார்க் கார்னியோ சுட்டிக்காட்டினார்.

மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டத்தின் மீறல்கள் பற்றிய தகவல்களையும் ஆதாரங்களையும் சேகரிக்கவும், ஒருங்கிணைக்கவும், பகுப்பாய்வு செய்யவும் பாதுகாக்கவும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தை கட்டாயப்படுத்துவதன் மூலம் இலங்கையில் பொறுப்புக்கூறலை புதிய தீர்மானம் முன்வைக்கிறது.

ஆகவே எதிர்கால பொறுப்புக்கூறல் செயன்முறைகளுக்கு இந்த ஆணை முக்கியமானதாக இருக்கும் என்றும் கனேடிய வெளிவிவகார அமைச்சர் மார்க் கார்னியோ சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் மனித உரிமைகள் தொடர்பான கடமைகளை நிலைநிறுத்தவும், தண்டனையை



முடிவுக்கு கொண்டுவரவும், ஒரு விரிவான பொறுப்புக்கூறல் செயல்முறையை மேற்கொள்ளவும் கனடா இலங்கையைத் தொடர்ந்துவலியுறுத்தும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தீர்மானம் இலங்கைக்குப் பாதுகாப்பான, அமைதியான மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு படியாகும் என சுட்டிக்காட்டிய அவர், இந்த இலக்கை நோக்கிச் செல்லும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க கனடா தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# கம்பி வலையில் சிக்கிய சிறுத்தை மயக்க ஊசி செலுத்தி மீட்கப்பட்டது!

நுவரெலியா–அக்கரபத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட போபத்தலாவ வனப் பகுதியில் கம்பிகளில் சிக்குண்டு, காயமடைந்த நிலையில் மீட்கப்பட்ட மலையகத்துக்கு உரித்தான சிறுத்தையை, சிகிச்சைகளுக்காகத் தாம் பொறுப்பேற்றுக் கொண்டனர் என வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

போபத்தலாவ வனப் பகுதியில் பகுதியில் கடந்த புதன்கிழமை காலை கம்பி வலையில் சிக்கிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட சிறுத்தை, கடும் போராட்டத்துக்கு மத்தியில் உயிருடன் பிடிக்கப்பட்டு, நுவரெலியா மிருக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

வேட்டையாடுவோரால் இந்தக் கம்பி கட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கம்பி வலையில் சிக்கியதால் காயம் ஏற்பட்டிருந்த குறித்த சிறுத்தையைக் கடும் சிரமத்துக்கு மத்தியில் மயக்க ஊசி செலுத்தி அதிகாரிகள் மீட்டனர்.

குறித்த சிறுத்தை கம்பிகளுடன், போபத்தலாவ அரச விளை நிலத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள உத்தியோகபூர்வ வீடுகளுக்கு மேல் வீழ்ந்திருந்த நிலையில், மீட்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

சுமார் 6 அடி நீளமான 9 முதல் 10 வயது மதிக்கத்தக்க மலையகப் பகுதிக்கு உரித்தான சிறுத்தையொன்றே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சிறுத்தையின் உடலில் பாரிய காயங்கள் காணப்படுவதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். வனவிலங்கு திணைக்களத்தின் மிருக வைத்திய அதிகாரிகள், அக்கரபத்தனை பொலிஸ் அதிகாரிகள் இணைந்து, சிறுத்தையை மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சிறுத்தை, சிகிச்சைகளுக்காக நுவரெலியா மிருக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

போபத்தலாவ அரசாங்கத்துக்குச் சொந்தமான வனப் பகுதியில் மான் மற்றும் பன்றிகளை வேட்டையாடுவதற்காக வேட்டையாளர்களால் இந்த கம்பி கட்டப்பட்டுள்ளதாகவும், இந்த கம்பியிலேயே சிறுத்தை சிக்குண்டுள்ளதாகவும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

# கறுவா சிகரெட்டை ஊக்குவிக்க வேண்டாம்!

### இலங்கை மருத்துவ சங்கம் கோரிக்கை

கறுவா உற்பத்தியிலான ஆயுர்வேத சிகரெட் தயாரிப்பு ஊக்குவிப்பு, கஞ்சா பயிர்ச்செய்கையை சட்டப்பூர்வமாக்கல் ஆகியவை நாணயத்தின் இரு பக்கங்களாகும். தனியார் நிறுவனங்கள் இலாபம் ஈட்டிக் கொள்வதற்காக இவ்வாறான உற்பத்திகளை அறிமுகப்படுத்துகிறார்கள்.

கறுவா உற்பத்தியிலான சிகரெட் தயாரிப்புக்கு மருத்துவ நிறுவனம், ஆயுர்வேத திணைக்களம் ஏதும் அனுமதி வழங்கவில்லை.

ஆயுர்வேத புகைத்தல் பாவனை இறுதியில் பாரதூரமான புகைத்தல் பாவனைக்கு கொண்டு செல்லும். ஆகவே, பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் இவ்வாறான உற்பத்திகளுக்கு ஒருபோதும் அனுமதி வழங்கக்கூடாது என இலங்கை மருத்துவ சங்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மார்தட்டும் கொரோனா அரக்கன்

யாழ்.நகரப் பகுதியில் கொரோனாப் பரவல் நிலைமை சுகாதார, மருத்துவ அதிகாரிகளையே அதிர்ச்சியில் ஆழ்த்தி நிற்கின்றது.

அதைக் கட்டுப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுப்பது என்று தெரியாமல், குழப்பமான, முரணிலையான கருத்து நிலைப்பாடுகள் அதிகாரிகள் மட்டத்தில் இருந்தமையைக் காணமுடிந்தது.

பரவல் வேகத்தை மட்டுப்படுத்தி நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு ஏதேனும் செய்ய வேண்டும், ஏதேனும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கட்டாயத்தில் அதிகாரிகள்.

ஆனால், பிரதேசங்களை முடக்காமல், பொருளாதாரத்தை பாதிக்க விடாமல், நாளாந்த வாழக்கை நடவடிக்கைகளைத் தடுக்காமல், விடயங்களைக் கொண்டு நடத்த வேண்டும் என்பது அரசாங்கத்தின் எண்ணம்.

கொரோனாவுடன்தான் வாழ வேண்டும் என்பது யதார்த்தம், கட்டாயம். ஆனால் அதற்காகக் கண்மண் தெரியாமல் கொரோனா பரவ இடமளித்து நிற்பதா என்பதுதான் கேள்வி.

கொரோனா பரவுகை எல்லை மீறுகின்றது என்று மருத்துவ, சுகாதார அதிகாரிகள் நேற்று பதறியடித்து, என்ன செய்வது என்று தடுமாறிக் கொண்டிருந்த அதே சமயம், நகரத்தில் ஒரு முன்னணிக் கோயிலில் பல நூற்றுக் கணக்கில் ஆள்கள் – பக்தர்கள் – திரண்டிருக்க மகோற்சவம் கோலாகலமாக நடைபெறுகின்றது. மக்கள் நெருக்கியடித்து, முட்டுப்பட்டுக் கோயிலுக்குள் சுவாமி தரிசனத்தில். சமூக இடைவெளி என்பது மருந்துக்கும் இல்லை. போதாக் குறைக்கு பக்தர்களில் பலரின் முகத்தில் முகக் கவசமும் இல்லை.

கொரோனாப் பேரரக்கனின் தொற்றுக் குறித்து யாழ்ப்பாண மக்கள் சிரத்தையே கட்டாத நிலைமை நிலவுகின்றது. அதைப் பொருட்படுத்தாமல் சாதாரண வாழ்வுக்குத் திரும்பி விட்டார்கள் மக்கள்.

வழியில் பொலிஸ் பிடிக்கலாம், தடுத்து விசாரிக்கலாம் என்ற கவனத்தில் தலைக்கு ஹெல்மெட் அணிவது போலத்தான் இப்போது வீட்டுக்கு வெளியே வரும் மக்கள் முகக்கவசம் அணிவதும் என்றாகி விட்டது.

விபத்துக்கள் நேர்ந்தால் அதிலிருந்து தப்புவதற்கு ஹெல்மட் அணிந்திருக்க வேண்டுமே என்று சிந்தித்து அதைக் செய்பவர்களை விட, வழியில் பொலிஸ் மறிக்கும் என்பதற்காக மட்டுமே நம்மில் பலர் ஹெல்மட் அணிகின்றார்கள்.

அது மாதிரித்தான் இப்போது நம்மவர்கள் முகக் கவசம் அணிவதும் கூட, கொரோனாத் தொற்றுப் பரவாமல் இருப்பதற்காக, தொற்றைத் தாங்கள் வாங்கிக் கொள்ளாமலும், தங்களுக்குத் தொற்று இருந்தால் அதை அடுத்தவருக்குப் பரப்பாமல் இருக்கவும் முகக் கவசம் அணிய வேண்டும் என்ற சிந்தனை நம்மில் பலருக்கு இல்லை. வீதியில், பொது இடங்களில் முகக் கவசம் அணிந்திருக்காவிட்டால் பொலிஸார், சுகாதார அதிகாரிகள் வழி மறித்துத் தொல்லை கொடுப்பார்கள் என்பதற்காகத்தான் நம்மில் பலர் முகக் கவசம் அணிகின்றார்கள்.

அது போலத்தான் சமூக இடைவெளியைப் பேணுவதும் கூட. கூட்டங்களை இயன்றவரைத் தவிர்த்தல், கூட்டங்களுக்கு மத்தியில் பாதுகாப்பாக முகக்கவசம் அணிந்திருந்தல், அடிக்கடி கைகளை தொற்று நீக்கி மூலம் கழுவுதல் போன்ற அடிப்படை விடயங்களைக் செய்வதில் கூட நமது சிரத்தை இல்லாமல் போயிருப்பது கண்கூடு.

யாழ். குடாநாட்டில் பொது நிகழ்வுகளை முடக்கும் தீர்மானமும் எடுக்கப்பட்டிருக்கின்றது. தவிர்க்க முடியாத நடவடிக்கைதான். அதனால் பலர் பாதிக்கப்படுபவர், சிக்கல்களை எதிர்கொள்பவர் என்பதும் புரிந்து கொள்ளத் தக்கதே.

யாழ்.மத்திய நகரப் பகுதியில் – பஸார் கடைப் பகுதியில் – தொற்றுப் பரவல் அதிகமாக இருப்பதால் அப்பகுதி பத்து நாள்களுக்கு முடக்கப்படுகின்றது. ஆனால் அந்த முடக்கத்தின் மூலம் இப்பரவலைக் கட்டுப்படுத்தி விடலாம் என்று எண்ணுவதும் அறிவற்ற சிந்தனைதான்.

மத்திய நகரப் பகுதியில் நேற்று அடையாளம் காணப்பட்ட 65 இற்கும் அதிகமானோர் அப்பகுதியில் பணி புரிகின்றவர்களே தவிர, அங்கிருக்கும் குடியிருப்புவாசிகள் அல்லர்.

அவர்கள் ஒவ்வொருவருக்கும் நகரத்துக்கு உள்ளேயோ அல்லது வெளியேயோதான் குடியிருப்புகள் உள்ளன.

அவர்கள் மூலமும், நகர மத்திய பகுதியில் இது வரை சோதனைக்கு உட்படுத்தப்படாமல் – அதேசமயம் தொற்றுப் பெற்றவர்கள் மூலமும் இந்தத் தொற்று நகருக்கு வெளியேயும் பரவிக் காலூன்றியிருக்கும் என்பது மறுக்க முடியாத எடுகோள்தான்.

அத்தகையோர் வாயிலாக இன்னும் எத்தனை பேருக்கு தொற்றுப் பரவியிருக்குமோ, இனிமேல் பரவுமோ ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

ஒன்று மட்டும் நிச்சயம். யாழ்.நகர மத்தி முடக்கத்துடன் மட்டும் இப்பிரச்சினையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடமுடியாது. இனித்தான் இந்தப் பரவுகையின் உச்சத் திருவிழா காத்திருக்கின்றது. எப்படி இந்த நெருக்கடியை யாழ்.நகரம் எதிர்கொண்டு சமாளிக்கப் போகின்றதோ தெரியவில்லை.

# அபிவிருத்தி என்ற பெயரில் நில அபகரிப்பை நிறுத்துக!

## சாணக்கியன் மன்றில் காட்டம்



வடக்கு, கிழக்கில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொல்பொருள் என்ற பெயரில் தமிழ் மக்களின் வளங்கள் சுரண்டப்படுவதற்கு உறுதுணையாக இல்லாமல் அதற்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

இன்று வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப் படுத்தும் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைந்துள்ளனர். தேசிய பட்டியலில் ஒருவருடன் சேர்த்து ஐவர் இருக்கின்றனர்.

உண்மையிலேயே இந்த ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த அரசாங்கத்துக்கு பாரிய அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும். எங்களுடைய வடக்கு, கிழக்கிலே அபிவிருத்தி பணிகளை செய்வதற்கு அவர்கள் முன்வர வேண்டும்.

எங்களுடைய பாரம்பரியமான நிலங்களை அபகரிப்பதற்கு, அதேபோன்று எங்களுடைய மதஸ்தலங்களினுடைய அபகரிப்பு செய்வதை நிறுத்திவிட்டு உண்மையிலேயே முழுமையான அபிவிருத்தி திட்டங்களைக் கொண்டுவருவதற்கு முயற்சிக்க வேண்டும்.

உதாரணமாக தொல்பொருள் திணைக்களத்தால் அன்புமுனை என்று சொல்லப்படும் ஒரு குளம் கூட கிரான் பிரதேசத்திலே இன்று வரைக்கும், அதற்கு நிதி ஒதுக்கப்பட்டும் அதனை செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

அதற்குரிய காரணம் தொல்பொருள் திணைக்களத்தால் அந்த இடத்தை அவர்களுக்குரிய இடமாக அடையாளப்படுத்தியுள்ளனர். இதன்காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

அதே நேரத்தில் இன்று அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் நபர்கள், இன்று நாடாளுமன்றத்தில் மட்டும் ஓர் ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் இதை கதைக்காமல், உண்மையிலேயே ஜனாதிபதியின் விசேட குழுவிற்கு இரண்டு தமிழர்களையாவது உள்வாங்க வைக்கலாம்.

இதனைப்பற்றி அறிந்த தமிழர்களையாவது உள்வாங்க வைக்கலாம். அதனை விட்டு விட்டு அபிவிருத்தி என்ற பெயரில் எங்களுடைய நில அபகரிப்பை அவர்கள் நிறுத்த வேண்டும். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கசிப்பு வைத்திருந்த பெண் திருமலையில் கைது!



திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கங்குவேலி பகுதியில் சட்டவிரோதமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை, மூதூர் சிறு குற்றத்தடுப்புப் பொலிஸார், கடந்த செவ்வாய்க்கிழமை இரவு முற்றுகையிட்டபோது, அங்கிருந்து கசிப்பு, கோடா போன்றவற்றுடன் பெண்ணொருவரை கைது செய்துள்ளனர்.

மேற்படி பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் இயங்குவதாக மூதூர் சிறு குற்றத்தடுப்பு பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், மூதூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் ஆலோசனைக்கமைவாக, அங்குள்ள வீடொன்று சுற்றிவளைக்கப்பட்டது.

இதன்போது அங்கிருந்து கசிப்பு காய்ச்ச பயன்படுத்தப்படும் கோடா ஒரு லட்சத்து 35 ஆயிரம் மில்லி லீற்றர், 1,500 மில்லி லீற்றர் கசிப்பு போன்றன கைப்பற்றப்பட்டன. அத்துடன், 55 வயதுப் பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டார் என மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

# கடற்றொழில் அமைச்சரின் அலுவலகத்தை முற்றுகையிட வடமாகாண மீனவர் அழைப்பு!

கடற்றொழில் அமைச்சரின் யாழ்.மாவட்ட அலுவலகத்தை முடக்கி முற்றுகைப் போராட்டத்துக்கு வடக்கு மாகாண மீனவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர் .

அந்த வகையில் எதிர்வரும் நாளை (வெள்ளிக்கிழமை) குறித்த முற்றுகை போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

அத்துமீறி இலங்கையின் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் உள்நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்தப் போராட்டம் மேற்கொள்ளப் போவதாக கடந்த புதன்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை, இந்திய மீனவர்களது பிரச்சினைகள் நீண்டகாலமாகப் பேசப்பட்டு வந்தாலும் வாய்மூலமான உறுதி மொழியும் காலத்தைக் கடத்தும் செயற்பாடுகளும் தான் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு எட்டப்பட வேண்டும். எங்களது வாழ்வாதாரங்கள் அல்லது வலிகள் வெளிக்கொண்டு வரப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் வடக்கின் நான்கு மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மீனவ அமைப்புகளும் இணைந்து ஒரு கலந்துரையாடல் ஒன்றை நடத்தினோம். அதன் இறுதியில் முற்றுகைப் போராட்டத்தை நடத்த ஏற்பாடு செய்துள்ளோம்.

எனவே அரசியல் பிரமுகர்கள், முச்சக்கர வண்டிகள் சங்கம், பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் என அனைவரும் இப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றனர்.

இப் போராட்டத்தினை யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனம்,பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், முல்லைத்தீவு மாவட்ட க.தொ.சங்.சமாசம், கிளிநொச்சி மாவட்ட க.தொ.சங்.சமாசம், மன்னார் மாவட்ட க.தொ.சங்.சமாசம் ஆகியோர் இணைந்து நடாத்தவுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# இந்த வருடத்தில் 83 யானைகள் பலி!

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 83 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன.

வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரண இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

மின்சார தாக்கம், துப்பாக்கிச்சூடு மற்றும் இயற்கை காரணிகள் காரணமாகவே இந்த மரணங்கள் பதிவாகியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தகுதி பஸிலுக்கு அறவே கிடையாது!

கொழும்பு, மார்ச்.26

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தகுதி பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷவிற்கு கிடையாது என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

அகலவத்தை பகுதியில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அரச நிர்வாகம் தொடர்பில் அனுபவமற்றவர் அரச தலைவரானார் முறையற்ற அரச நிர்வாகமே செயற்படுத்தப்படும் என ஆரம்பத்தில் குறிப்பிட்டோம். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அரசியல் அனுபவம் கிடையாது. எனவே, அவர் தற்போது இராணுவ அதிகாரிகளை கொண்டு சிவில் நிர்வாகத்தை முன்னெடுக்க முயற்சிக்கிறார். அவரது செயற்பாடுகள் அனைத்தும் தோல்வியடைந்துள்ளன.

ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து ஒன்றரை வருடம் நிறைவு பெற்றுள்ளன.



இதுவரையிலான ஆட்சி நிர்வாகத்தை நாட்டு மக்கள் குறிப்பாக அவருக்கு ஆதரவு வழங்கிய 69 லட்சம் மக்களே அவரை புறக்கணித்துள்ளனர்.

இயற்கைக்கு எதிரான செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கிறது. இயற்கைக்கு எதிரான செயற்பாடுகள் அரசாங்கத்துக்கு பாரிய விளைவை ஏற்படுத்தும்.

2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடும் விவகாரத்தில் ராஜபக்ஷர்களுக்கு மத்தியில் பாரிய போட்டித்தன்மை காணப்படுகிறது.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கும் நிலைப்பாட்டில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளார். பொதுஜன பெரமுனவின் ஒரு சில உறுப்பினர்கள் பஸில் ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கும் நிலைப்பாட்டில் உள்ளார்கள். ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் தகைமை பஸில் ராஜபக்ஷவிற்கு கிடையாது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இலங்கைக்கு பொருத்தமற்றது. அரச அதிகாரங்கள் அனைத்தும் ஜனாதிபதி வசம் காணப்படும் போது சர்வாதிகார ஆட்சி முறைமை முன்னெடுக்கப்படும்.

இலங்கையில் தற்போது சர்வாதிகார ஆட்சிக்கான தன்மை காணப்படுகிறது. அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் ஜனாதிபதிக்கு வரையறையற்ற அதிகாரத்தை வழங்கியுள்ளது. ஆகவே, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இலங்கைக்கு பொருத்தமற்றது.

மாகாண சபை முறைமையும் இலங்கைக்கு பொருத்தமற்றது. இந்தியாவால் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதால் எவ்வித பயனும் நாட்டு மக்களுக்கு கிடைக்கப் பெறாது என்றும் அவர் கூறினார்.

# காடழிப்புக்கு எதிராக சவப்பெட்டியேந்தி ஐக்கிய மக்கள் சக்தியினர் ஆர்ப்பாட்டம்!





காடழிப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்து 'சுவாசிப்பதற்கு இடமளியுங்கள்' என்ற தொனிப்பொருளில் ஐக்கிய மக்கள் சக்தி கடந்த புதன்கிழமை கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தது.

கொழும்பு 7 இல் உள்ள விஹாரமகாதேவி பூங்கா வளாகத்தில் புதன் மாலை 3 மணியளவில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்களின் பங்கேற்புடன் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான துஷார இந்துனில் , நளின் பண்டார மற்றும் ஹெக்டர் அப்புஹாமி 'சுற்றாடல்' என்று சிங்கள மொழியில் எழுதப்பட்ட சவப்பெட்டியை சுமந்து சென்றவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்தோடு ஆதிக்குடிகளைப் போன்று வேடமிட்டிருந்த நபர்கள் சுற்றாடலை பாதுகாப்பதற்கு பூஜை வழிபாடுகளில் ஈடுபடுவதைப் போன்று நடனமாடினர்.

அத்தோடு விலங்குகளின் படங்கள் பதிக்கப்பட்டு 'எமது குடியிருப்புக்களை அழிக்காதீர்' என்ற வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தோர் ஏந்தியிருந்தனர்.

'எதிர்கால சந்ததியினருக்காக சுற்றாடலை பாதுகாப்போம்', 'விலங்குகளின் இருப்பிடங்களை பாதுகாப்போம்', 'சுற்றாடல் அழிவு தேசியத்திற்கு அச்சுறுத்தல்', 'இன்று பாக்ய நாளை உங்கள் மகள்' என்ற வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் ஏந்தியிருந்தனர்.

இதன் போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கருத்துத் தெரிவிக்கையில் –

சுற்றாடலை பாதுகாப்பதற்கான போராட்டத்தில் மக்களுடன் இணைந்து ஈடுபட்டுள்ளமை பெருமையளிக்கிறது.

இந்த போராட்டத்தில் எவ்வித பேதமும் இன்றி மக்கள் எம்முடன் இணைந்துள்ளனர். இவ்வாறு எவ்வித பேதமும் இன்றி நாமனைவரும் ஒன்றிணைந்து இயற்கையை பாதுகாப்பதற்கு அழைப்பு விடுக்கின்றோம். இந்த ஆர்ப்பாட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுப்போம்.

விடுதலைப்புலிகள் அமைப்பைப் போன்று , வனங்களை அழிக்கும் தீவிரவாதிகளையும் தோல்வியடைச் செய்வோம். ஆணைவிழுந்தான் , ஹோட்டன் சமவெளி, சிங்கராஜவனம், வில்பத்து, நக்கிள்ஸ் மலை என அனைத்தும் இன்று அபாயத்திலுள்ளன.

ஆனால் இவை அனைத்தையும் பாதுகாப்பதற்கு நாம் முன்னின்று செயற்படுவோம். இதுபோன்ற அமைதியான போராட்டங்களை நாம் நாடு முழுவதும் முன்னெடுப்போம் என்றார்.

## முக்கிய கட்டளைச் சட்டங்களைத் திருத்த மாகாண சபைகளின் சம்மதம் பெற முடிவு!

உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான முக்கிய கட்டளைச்சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக 13 ஆவது அரசமைப்பு திருத்தத்துக்கமைய மாகாண சபைகளின் நிலைப்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பல வருடங்களுக்கு முன்னர் சட்டமாக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான முக்கிய கட்டளைச் சட்டங்களான மாநகரசபை கட்டளைச் சட்டம் , நகரசபை கட்டளைச்சட்டம் மற்றும் பிரதேசசபைச் சட்டம் போன்றவற்றை புதுப்பிப்பதற்காக சட்ட வரைஞரால் குறித்த சட்ட மூலங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

மேற்படி சட்ட மூலத்தில் மேலும் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் தொடர்பில் சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தை சட்டமா அதிபரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள திருத்தங்கள் உள்ளடங்கலாக , மேலும் திருத்தியமைத்து அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் 154 (ஏ) உறுப்புரைக்கமைய மாகாணசபைகளின் நிலைப்பாடுகளை பெற்றுக் கொள்வதற்கு அரச சேவைகள் , மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## மட்டக்களப்பு வாகரையில் மோ. சைக்கிள் விபத்து!



மட்டக்களப்பு வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள கதிரவெளி பிரதேசத்தில் மோட்டர் சைக்கிள் வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாகரையைச் சேர்ந்த 30 வயதுடைய ஆனந்தராஜா பார்த்தீபன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த நபர் வாழைச்சேனை திருகோணமலை வீதியிலுள்ள கதிரவெளிபகுதியில் சம்பவதினமான செவ்வாய் மாலை மோட்டார் சைக்கிளில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பிரேத அறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான விசாரணைகளை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.

வணிகத்தில் முதலாம் தேர்வு (வெளிவாரி) முதலாம் அரையாண்டுப் பரீட்சை – 2018
வணிகத்தில் மூன்றாம் தேர்வு (வெளிவாரி) இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை – 2017

மேற்படி பரீட்சையானது எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன. மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியான மாணவர்கள் **பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தினை 26.03.2021** ஆம் திகதியிலிருந்து **07.04.2021 ஆம்** திகதி வரை அலுவலக நேரத்தில் (காலை 8.30 மணி – மாலை 4.15 மணி வரை) **திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில்** அல்லது **www.codl.jfn.ac.lk** என்ற இணையத்தளத்தினூடாகவும் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் பரீட்சை அனுமதி அட்டை விநியோகம், பரீட்சை நேர அட்டவணை தொடர்பான விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

**பதிவாளர்**
**25.03.2021**


# டுபாயிலிருந்து கட்டுநாயக்கவுக்கு வந்த சடலம் கெசல்வத்தே தினுகவினுடையது!

## அஜித் றோஹண உறுதிப்படுத்தல்

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு டுபாயிலிருந்து கடந்தவாரம் ராஜபக்ஷகே கசுன் மதுரங்க எனும் பெயரில் அடையாளப்படுத்தப்பட்டு எடுத்துவரப்பட்ட சடலம், ராஜபக்ஷ ஆரச்சிகே தினுக மதுஷான் எனும் கெசல்வத்தே தினு கவினுடையது என உயிரியல் மூலக்கூறுகளின் அடிப்படையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

டி.என்.ஏ. மரபணு பரிசோதனை மற்றும் கைவிரல் ரேகை ஆகியவற்றை வைத்து குறித்த சடலம் பல்வேறு குற்றங்கள் தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நிலையில், ஐக்கிய அரபு அமீரகத்துக்கு தப்பிச் சென்று டுபாயில் வசித்த நிலையில் உயிரிழந்தார் எனக் கூறப்படும் பாதாள உலகத் தலைவரான கெசல்வத்தே தினுக எனும் ஆர்.ஏ. தினுக மதுஷானினுடையது என உறுதி செய்யப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இந்நிலையில் குறித்த சடலம் நீர் கொழும்பு வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்ட பிரேத பரிசோதனைகளின் பின்னர், தினுகவின் மனைவியிடம் ஒப்படைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.

எவ்வாறாயினும் அவரது மரணத்துக்கான காரணம் உறுதியாகத் தெரியவராத நிலையில், உடற் கூறுகள் மேலதிக ஆய்வுக்காக பெறப்பட்டு அரச இரசாயனபகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளன. – என்றும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir




# மக்கள் இலக்கியவாதி நீர்வை பொன்னையன்

**இன்று ஈழத்து மூத்த எழுத்தாளர் நீர்வை பொன்னையன் (1930 - 2020) அவர்களின் நினைவு தினம். அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

**● முருகபூபதி**

உலகெங்கும் கொரோனோ வைரஸ் அச்சுறுத்தலுக்கு மத்தியில் இலங்கையிலும் ஊரடங்கு உத்தரவு நடைமுறையிலிருந்த காலப்பகுதியில் கடந்த 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் திகதி ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நீர்வை பொன்னையன் அவர்களின் மறைவும் எதிர்பாராமல் நிகழ்ந்தது.

கடந்த ஆண்டு இதே மாதம் 24 ஆம் திகதிதான் நீர்வைபொன்னையன் தமது 90 வயதையும் பூர்த்தி செய்திருந்தார். இறுதியாக அவர் எழுதி முடித்திருந்த




நூலொன்றும் அச்சாகி வெளிவரவிருந்தது. கொரோனா வைரஸ் அச்சுறுத்தலின் பதற்றமான சூழ்நிலையினால் தமது புதிய நூலையும் பார்க்கமுடியாமல் நிரந்தரமாக கண்களை மூடிக்கொண்டார்.

இனி எம்மிடம் எஞ்சியிருக்கப்போவது நீர்வை பற்றிய நினைவுகள் மாத்திரமே.

இலங்கையில் தமிழ் கலை, இலக்கிய பரப்பில் மாவை, வல்வை, கரவை, சில்லையூர், காவலூர், திக்குவல்லை, நீர்கொழும்பூர், நூரளை, நாவல் நகர், உடப்பூர், மாத்தளை முதலான பல ஊர்கள் பிரசித்தமாவதற்கு அங்கு பிறந்த பல கலைஞர்களும் படைப்பாளிகளும் காரணமாக இருந்துள்ளனர்.

இவ்வாறு ஊரின் பெயரையே தம்முடன் இணைத்தவாறு இலக்கியப்பயணத்தில் தொடரும் பலருள் நீர்வை பொன்னையனும் ஒருவர். மூத்த இலக்கியப் படைப்பாளி.

வடபுலத்தில் நீர்வேலியில் 1930 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி பிறந்த நீர்வை பொன்னையன், தமது ஆரம்பக்கல்வியை நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் ஆரம்பித்து பின்னர் மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா கல்லூரியிலும் தொடர்ந்து, பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக கிழக்கிலங்கையில் சம்மாந்துறை முஸ்லிம் பாடசாலையில் பணியாற்றிவிட்டு இந்தியாவில் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் பயின்று பட்டதாரியாக தாயகம் திரும்பினார்.

இலங்கை தமிழ் இலக்கிய ஊடகத்துறையில் நீர்வை என்றே அழைக்கப்பட்டவர். இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்பே 1947 ஆம் ஆண்டளவில் இடதுசாரிச் சிந்தனைகளினால் கவரப்பட்ட நீர்வை, வடபகுதியில் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தம்மை இணைத்துக்கொண்டு பல போராட்டங்களிலும் கலந்துகொண்டவர். இலங்கை இடது சாரி இயக்கத்திலும் முற்போக்கு இலக்கியத்துறையிலும் இவர் இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரின் முதலாவது சிறுகதை பாசம். யாழ்ப்பாணம் ஈழநாடு இதழில் வெளியானது. இதுவரையில் சுமார் நூறு சிறுகதையும் எழுதியிருப்பவர்.

நீர்வை பொன்னையன் காலத்து எழுத்தாளர்கள் என்று சிலரைக் குறிப்பிடலாம். இளங்கீரன், எஸ்.பொன்னுத்துரை, கே.டானியல், அகஸ்தியர், டொமினிக்ஜீவா, செ.கணேசலிங்கன் முதலான பலர் இவரைப்போலவே இடதுசாரி சிந்தனைகளுடனேயே இலக்கிய இயக்கத்தில் ஈடுபட்டவர்கள்.

இவர்கள் மத்தியில் பல்வேறு கருத்துப் போராட்டங்கள் நிலவியபோதிலும் முரண்பாடுகளை நாகரிகமாக வெளிப்படுத்தியவர்கள். அதனால் அவர்களின் பின்னர் உருவான அடுத்த தலைமுறையினருக்கு முன்மாதிரியாகவும் விளங்கினர்.

இலங்கையிலும் இந்தியாவிலும் இடதுசாரிச்சிந்தனைகள் சீன ரஷ்ய கம்யூனிஸ் கோட்பாடுகளுடன் இரண்டறக் கலந்திருந்தமையினால் அந்நாடுகளுக்கிடையில் ஏற்பட்ட கருத்துப்பிளவுகள் எங்கள் தாயகத்திலும் இந்தியாவிலும் பிரதிபலித்தன.

இலங்கையில் மாஸ்கோ சார்பு, பீக்கிங் சார்பு நிலைப்பாடுகளுடன் ட்ரொஸ்கிய நிலைப்பாடுகளும் தவிர்க்கமுடியாத அடையாளமாகின. நீர்வை பொன்னையன் சார்ந்திருந்த சீன சார்பு கம்யூனிஸ இயக்கத்திலும் பிளவுகள் தோன்றின.

எனினும் பொன்னுத்துரை தவிர்ந்த ஏனைய பலர் முற்போக்கு இலக்கிய முகாமிலேயே இறுதிவரையில் தங்கினர். இடையில் டானியல், சில்லையூர் செல்வராசன், ரகுநாதன், சுபத்திரன், புதுவைரத்தினதுரை, இளங்கோவன் முதலானோர் தனியாக பிரிந்துசென்றனர்.

யாவற்றுக்கும் அடித்தளம் சித்தாந்த மோதல்களே. அவர்களுக்குப் பின்னர் நான்காவது தலைமுறையில் எனது வயதை ஒத்தவர்கள் பலர் இவர்கள் அனைவருடனும் இலக்கிய நட்புணர்வை ஆரோக்கியமாகவே தொடர்ந்து வந்திருக்கின்றோம்.

நீர்வை பொன்னையன் 1960 களில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் இணைந்தவர். நானும் சாந்தனும் திக்குவல்லை கமாலும் மேமன் கவியும் 1970 இற்குப்பின்னர் அதில் இணைந்தோம்.

ஆயினும் மூன்றாவது இலக்கியத்தலைமுறையினரான செ.யோகநாதன், செ.கதிர்காமநாதன் முதலான எழுத்தாளர்களுடன் இணைந்து நீர்வை பொன்னையன் 'மூவர் கதைகள்' என்ற தொகுப்பினை வெளியிட்டார். நான் இலக்கியப்பிரவேசம் செய்த 1970 காலப்பகுதியில் அதனைப் படித்தவுடனேயே சிறு விமர்சனம் எழுதி பூரணி இதழ் இணை ஆசிரியர் என்.கே. மகாலிங்கத்திடம் கொடுத்தேன்.

நான் எழுதிய முதலாவது நூல் விமர்சனம் அது தான். எனினும், அதனை மேலும் செம்மைப்படுத்தி எழுதிக்கொண்டு வருமாறு மகாலிங்கம் திருப்பித் தந்தார். அத்துடன் விமர்சகர்கள் விரைவில் உருவாகிவிடுவார்கள், ஆனால் , சிறுகதை, நாவல், கவிதை எழுதும் ஆக்க இலக்கிய கர்த்தாக்கள்தான் இன்றைய அவசரத்தேவை என்ற கருத்தையும் அவர் வலியுறுத்தினார்.


1970 காலப்பகுதியிலேயே நீர்வைபொன்னையனின் கதைகளைப் படிக்கத் தொடங்கிவிட்டேன். கொழும்பில் அக்காலப்பகுதியில் மாவை நித்தியானந்தன், சாந்தன், குப்பிழான்சண்முகன், நெல்லை.க.பேரன் முதலானோர் கலை இலக்கிய நண்பர்கள் கழகம் என்ற அமைப்பினை உருவாக்கி வெள்ளவத்தை தமிழ்ச்சங்கத்திலும் நண்பர்களின் இல்லங்களிலும் மாதாந்தம் சந்திப்புகளை நடத்தினார்கள்.

இலக்கியம்,ஓவியம், நாடகம், திரைப்படம், இசை, நடனம் முதலான துறைசார்ந்தவர்களின் பணிகளை ஆராயும் தரமான சந்திப்புகளாக நடந்தன. நீர்வை பொன்னையனையும் அழைத்து இலக்கியச் சந்திப்பை கலை, இலக்கிய நண்பர்கள் கழகம் நடத்தியது.

அதில் கலந்துகொண்ட பொழுதுதான் நீர்வை அவர்களை நான் முதல் முதலில் சந்தித்தேன்.

நீர்வையின் முதலாவது சிறுகதைத்தொகுதி 'மேடும் பள்ளமும்', 1961 இல் வெளியானது. இதற்கு இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர் பிரேம்ஜி ஞானசுந்தரன் முன்னுரை எழுதியிருக்கிறார். அதனைத் தொடர்ந்து 'உதயம்' என்ற இரண்டாவது தொகுப்பு 1970 இல் வெளியானது. இவரும் செ.யோகநாதனும் செ. கதிர்காமநாதனும் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பு மூவர் கதைகள் 1971 இலும் பின்னர் பாதை, 'வேட்கை', 'உலகத்து நாட்டார் கதைகள்' முதலான தொகுப்புகளையும் இலக்கியத்திற்கு வரவாக்கிய நீர்வை பொன்னையன், முற்போக்கு இலக்கிய முன்னோடிகள் வரிசையில் இந்திய எழுத்தாளர்கள் பிரேம்சந்த், சரத்சந்திரர், முல்க் ராஜ் ஆனந்த், மற்றும் ருஷ்யா இலக்கிய மேதை மாக்ஸிம் கோர்க்கி முதலான எழுத்தாளர்கள் பற்றியும் விரிவாக எழுதினார்.

'நாம் ஏன் எழுதுகின்றோம்..?' என்ற நூல் இடதுசாரிச் சிந்தனைகளையும் முற்போக்கு இலக்கியக்கோட்பாடுகளையும் அவர் எவ்வாறு உள்வாங்கிக்கொண்டார் என்பதற்கான பதிவாக விளங்குகின்றது. நினைவலைகள் என்ற மற்றுமொரு சுயவரலாற்று நூல் சர்ச்சைகளையும் ஏற்படுத்தியிருந்தது.கொழும்பில் இலங்கை திரைப்படக்கூட்டுத்தாபனத்தில் நீர்வை பணியாற்றிய காலத்தில் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திற்கு இவரால்




அறிமுகப்படுத்தப்பட்ட சிங்கள அன்பர்தான் கவிஞரும் மொழிபெயர்ப்பாளருமான ரத்ன நாணயக்கார.

இவர் மகாகவி பாரதியின் சில கவிதைகளை சிங்களத்தில் மொழிபெயர்த்துள்ளார். ரத்ன நாணயக்காரவும் அவரைப்போன்ற மற்றுமொரு தமிழ் அபிமானியான கே.ஜி. அமரதாஸவும் சிங்களத்தில் மொழிபெயர்த்த சில பாரதி கவிதைகளை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1982 இல் பாரதி நூற்றாண்டு காலத்தில் வெளியிட்டிருக்கிறது.

பாரதி நூற்றாண்டு காலத்தில் பிரதேச அபிவிருத்தி இந்து கலாசார அமைச்சர் செல்லையா இராஜதுரை தமிழ்நாட்டிலிருந்து இசையமைப்பாளரும் முற்போக்கு கலைஞருமான எம்.பி.ஸ்ரீநிவாசனை இலங்கைக்கு அழைத்திருந்தார்.

யார் இந்த ஸ்ரீநிவாசன்....?

ஒரு கால கட்டத்தில் சென்னையில் இடதுசாரி கலை இலக்கியவாதிகள் கூட்டாக இணைந்து தயாரித்து வெளியிட்ட 'பாதை தெரியுது பார்' என்ற திரைப்படத்தின் இசையமைப்பாளர். இந்தப்படத்தில் சில காட்சிகளில் ஜெயகாந்தனும் வேண்டா வெறுப்பாக தோன்றி நடித்திருந்தார். எனினும் படத்தின் நீளம் கருதி அதனை சுருக்கும்பொழுது தான் வரும் காட்சிகளை ஜெயகாந்தன் நீக்கச்சொன்னார்.

இந்தப்படத்திற்கும் சிவகுமார் நடித்த புதுவெள்ளம் படத்திற்கும் இசையமைத்தவர்தான் எம்.பி.ஸ்ரீநீவாசன். வெங்கட் சாமிநாதனின் கதையான அக்ரகாரத்தில் 'கழுதை' என்ற தரமான படத்தில் ஒரு பேராசிரியராக நடித்தவர் ஸ்ரீநிவாசன். அடிப்படை இந்துத்துவா பழைமைவாதிகளும் சநாதனவாதிகளும் இந்தப்படத்தை தடை செய்வதற்கு பெரும் பிரயத்தனங்களில் ஈடுபட்டனர். எனினும் அக்ரகாரத்தில் கழுதை விருதுகளை வென்றது.

**(11 ஆம் பக்கம் பார்க்க...)**



02

- வே.வரதசுந்தரம் -

# கோணமலை காளி ஆச்சி தரிசிப்போம் வாரீர்!

கவியரசன் கம்பனுக்கு அருளிய காளி

**மீன்கயல் பொறித்தநம்**
**திருக்கோண மலையுறை**
**மீனாட்சி! காமாட்சி!**
**ஆச்சிநீ காளி!**
**ஊரவர் துயர்களைய**
**அற்புதங்கள் செய்திடுவாள்!**
**ஈரமுடை நெஞ்சத்தாள்**
**ஆச்சிநீ காளி!**
**நின்கோபுர தரிசனம்**
**கோடி புண்ணியம்**
**கோணமலைத் தாயே**
**ஆச்சிநீ காளி!**

- இவ்வாறு பாடிக் கசிந்துருகும் திருகோணமலை பத்திரகாளி அம்பாள் அடியார்கள் கவியரசன் கம்பன் அம்பாள் பக்தன், அன்னை அருளில் திளைத்தவர் என்றறிந்து பரவசம் அடைகின்றனர்.

கம்பன் இரவிரவாகக் கண்விழித்து இராமாயணப் பாடல்களைப் பாடிய கவியரசன்.

**'விழுந்த ஞாயிறு எழுவதன்முன்**
**வேதியருடன் ஆராய்ந்து**
**எழுந்த ஞாயிறு விழுவதன்முன்**
**கவிபாடினான் எழுநூறே"** - என்பர்.

விடியற்காலை அம்பாள் 'விடிந்தது கம்பா' என்று



கூற "முடிந்தது அம்பா"என்று கம்பர் கூறினார் என அறிகிறோம். கம்பர் இரவிரவாகப் பாட மாணாக்கர்கள் எழுதிட திருவொற்றியூர்க் காளி தீவட்டி பிடித்தாள் என்றால் பாருங்களேன், அவள் பாவலருக்கு வழங்கும் உற்சாகத்தை!

**'ஒற்றியூர் காக்க வுறைகின்ற காளியே**
**வெற்றியூர்க் காக்குதன் மெய்ச்சரிதை - பற்றியே**
**நந்தா தெழுதுதற்கு நல்லிரவின் மாணாக்கர்**
**பிந்தாமற் பந்தம் பிடி"** - என்ற பாடல் இதனைக் கூறுகின்றது.

காளி கடாட்சம் கம்பருக்கு நிறையவே இருந்தது. கம்பர் சரஸ்வதிதேவி மீது பாடிய பாடல்கள் தோத்திரஞ் செய்ய வேண்டியவை.

**ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்**
**ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய**
**உருப்பளிங்கு போல்வாள் என்னுள்ளத்தின் உள்ளே**
**இருப்பவள் இங்குவாராது இடர்!**

## தெய்வ சங்கற்பம்

இராமேஸ்வரத்தில் வாழ்ந்த ஓர் அந்தணருக்கு ஓர்அசரீரி கேட்டது. 'திருக்கோணேஸ்வரம் செல். அங்கே ஒரு குறிப்பிட்ட இடத்தில், தொங்கு செவ்வரத்தை மரமொன்றின்கீழ் ஒரு விக்கிரகம் உண்டு. அதனை எடுத்துப் பூசைசெய்'. இதுவே அவ்வசரீரி ஆகும். தான் கேட்ட அசரீரியின் கூற்றுப்படி அவ்வந்தணர் திருகோணமலை வந்து கிடங்கினைத் தோண்டியபோது, என்னே அதிசயம்!. அங்கே ஒரு செப்புக் கிடாரம் காணப்பட்டது. அக்கிடாரத்தினுள் ஓர் அம்மன் விக்கிரகம் காணப்பட்டது.

அன்று தொடக்கம் இன்றுவரை இக்கோவிலில் நடைபெறுகின்ற பிரதான விழாக்களில் இந்தக் காளியம்பாள் விக்கிரகம் சிறப்பிடம் பெற்று வருகின்றது.



காளிஅம்பாளின் விக்கிரகம் தாளியிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட காட்சி இக்கோவிலின் சித்திரத் தேரில் படைப்புச் சிற்பமாக வடிவமைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். இராஜ கோபுரத்திலும் இச்சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது.

அகழ்ந்தெடுக்கப்பட்ட செப்புக் கிடாரமும் அதற்குள் வைத்துப் பாதுகாக்கப்பட்டிருந்த பத்திரகாளி அம்பாளின் விக்கிரகமும் இக்கோவிலின் தோற்றக் காலம் பற்றிய தரவுகள் சிலவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு உதவியாக இருக்கின்றன. செப்புக் கிடாரத்தின் வடிவமைப்பினையும் உலோக வார்ப்பு முறையினையும் அவதானிக்கையில் மிகப் பழைமை வாய்ந்த தொன்றாகவே இக்கிடாரம் காணப்படுகின்றது.

பத்திரகாளி அம்பாள் விக்கிரகத்தினுடைய வடிவமைப்பு ஏறத்தாழ 11ஆம், 12ஆம் நூற்றாண்டுகளில் தமிழக் கோவில்களில் காணப்பட்ட காளியம்மன் உருவங்களை ஒத்ததாக காணப்படுகின்றது. இவ்விக்கிரகத்தின் காலத்தை திட்டவட்டமாகக் கூற முடியாவிட்டாலும் அது மிகப்பழமை வாய்ந்த தொன்றெனக் கூறிக்கொள்ள முடியும், என்பர் அறிஞர்.

அம்மன் விக்கிரகம், கிடாரம் ஆகியவை தவிர்ந்த ஏயை செய்திகளும் இக்கோயிலின் தொன்மை பற்றிப் பேசுகின்றன இக்கோயிலில் உள்ள உல் என்ற தேங்காய் உரிக்கும் கல்லிலே ஒர. கல்வெட்டு காணப்படுகிறது.

**ஊ காளி அம்மனுக்கு**
**ஆயி செம்புலிங்கம்**
**செய்துகொடுத்தது**
**1878 தை.**

## கல்வெட்டுச் சிறப்பு

நிருத்த மண்டபத்தில் வலதுபுறத் தூணில் இக்கோயிலில் காணப்பட்ட கல்வெட்டும் இக்கோயிலின் தொன்மையை எடுத்தியம்புகிறது என்பார் கலாநிதி செ.குணசிங்கம் அவர்கள். இதோ அவர் கூற்று:

'இத்தூண் 9அடி 2அங்குலம், நீளம் 9அடிஅகலம் உடையது. கல்வெட்டு கிழக்குப் பகுதியில் ஆரம்பித்துத் தென்மேற்குப் பகுதியில் தொடர்ச்சியாக எழுதப்பட்டிருந்தது. கிழக்குப் பகுதியில் முப்பத்தேழு வரி எழுத்துக்களும் தெற்குப் பகுதியில் முப்பத்தாறு வரிகளும், மேற்குப் பகுதியில் முப்பத்தேழு வரிகளும் காணப்பட்டன. தூணில் மூன்று பக்கங்களிலும் கிடைத்த கல்வெட்டுப் பகுதி முதலாம் இராஜஇராஜனின் மகனாகிய முதலாம் இராஜேந்திரனின 1012 கிபி - 1044 மெய்கீர்த்திப் பகுதியாகும்.

மெய்கீர்த்திப் பகுதி என்பது அரசர் தமது காலங்களில் மேற்கொள்ளும் வெற்றிகரமான படையெடுப்புகளையும் தம் கால, சிறப்பான வீரமிக்க நிகழ்ச்சிகளையும் குறிக்கப்படுகின்ற பகுதியாகும். இக்கோயிலுக்குச் சொந்தமான தூண் கல்வெட்டு, அதன் எழுத்து வளர்ச்சி அடிப்படையிலும், கூறும் பொருளின் அடிப்படையிலும் அவதானிக்கும்போது இற்றைக்கு ஏறத்தாழ ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் பொறிக்கப்பட்டதாகும் என்பார்கள் அறிஞர்கள்.

சமகால தென்கிழக்காசிய பேரரசுடன் போராடி இந்து சமுத்திர வர்த்தகத்தில் தம்மாதிக்கத்தை ஏற்படுத்த விரும்பிய சோழர் இலங்கையைக் கைப்பற்றிய போது சிறப்புமிக்க துறைமுகமாக விளங்கிய திருகோணமலை துறைமுகத்திற் கவனம் செலுத்தினர். இதனால் இலங்கையில் வேறு எந்த மாவட்டத்தைக்காட்டிலும் திருகோணமலை மாவட்டம் சோழ



ரின் கவனத்தை ஈர்த்த மாவட்டமாக விளங்கியது.

பிற சான்றுகள் மாத்திரமன்றித் திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை கிடைத்துள்ள அதிகளவிலான சோழர்காலக் கல்வெட்டுக்களினால் இக்கருத்து உறுதிப்படுத்தப்படும். இந்த விதத்தில் பத்திரகாளி அம்மன் கோயிலிலுள்ள சோழர்காலக் கல்வெட்டு திருகோணமலை மாவட்டத்திற்குரிய சோழர்காலக் கல்வெட்டுக்களின் தொகையை அதிகரித்து, மேற்படி கருத்தினை மேலும் வலுப்பெறச் செய்கின்றது என்ற விதத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது."

**ஔடதம் அவளருளே ஆணவப்பிணி தீர்க்கும்**
**ஔவைக்கும் ஔவை ஆத்தாள் பத்திரகாளி**
**கௌரீஸ்வரி கருமாரி கயவரை ஒறுப்பாள்**
**கௌணியற்கு பால்சுரந்த காமாட்சி கருணாகரி**
**சௌக்கியமும் அவளே சௌபாக்கியமும் அவளே**
**சௌந்தரியம் சாந்தி சமாதானம் நல்குவாள்**
**மௌனமே பாயையாக மோனநிலை விளக்குகிறாள்**
**மௌனித்த கோபுரத்து மாகாளி அன்னை!**

- இவ்வாறு காளி ஆச்சியை ஏத்துகிறார் சங்கீத கலா வித்தகி கா. மணிமேகலாதேவி.

(தொடரும்....)



# நமக்கு ஒரு கிருஷ்ணர் தேவை!



செ.ரவீந்திரன்
சட்டத்தரணி,
ஆஸ்திரேலியா

ஜெனிவா மாநாடு முடிந்து விட்டது. தீர்மானம் இலங்கைக்கு எதிராக, ஒப்பேற்றப்பட்டு விட்டது. ‘தீர்மானம் கவலையானது’, ‘தமிழர்களுக்கு முழுமையாக நன்மை தருவதாக இல்லை’, ‘இந்தியா மதில் மேல் பூனையாக இருந்து விட்டது’ என்றெல்லாம் பலவிதமான கருத்துக்கள்.

மஞ்சள் காமாலையால் பீடிக்கப்பட்ட கண்களால், இலங்கையின் வெளிநாட்டு மந்திரி 25 நாடுகளாவது முழுமையாக ஆதரிக்கவில்லை, 14 நாடுகள் நடுநிலைமை வகித்தன, ஆகவே ஆதரவு எங்களுக்கே உண்டு என்று பரப்புரை தருகிறார்.

இலங்கைகொடுத்தஎவ்வளவோஅழுத்தங்களின் மத்தியிலும் கூட அதற்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்கவில்லை.

தமிழர்கள் எதிர்பார்த்தபடி எங்களுக்காக முஷ்டியை உயர்த்திக் காட்டி வாக்களித்து ஆதரவுதரவில்லை.

நடுநிலையில் நின்றது உண்மைதான். ஆனால் அது ஒரு மனசுத்தியான நடுநிலைதானா என்பது அதில் ஈடுபட்டோருக்கு அது வெளியிட்ட அறிக்கையில் இருந்து புரியவேண்டும்.

ஒரு கிளாஸில், இருக்கும் அரைவாசி தண்ணீரை பார்பவன் தனது மனோ பாவத்தில் ‘இதில் அரைவாசி தண்ணீர்தானே’- என்று அவநம்பிக்கையாளன் யோசிப்பான். நம்பிக்கையாளன் ’இதனை நான் நிரப்பி முற்றாக்க வேண்டும்’ என்று நினைப்பான். இதில் தமிழ் மக்களாகிய நாங்கள் நம்பிக்கை யாளர்களாக, இந்தியாவுடன் இணைந்து காரியமாற்றி நகர்வுகளை மேற்கொள்ள வேண்டும். அடுத்த ஜெனிவாத் திருவிழா தொடங்குகின்ற வேளைகளில், மீள இறங்குவதை விட்டு இப்பொழுதே தேவையான கட்டமைப்புக்களை உருவாக்கி இணைந்து செயற்பட ஆயத்தமாக வேண்டும்.

சாதாரண அரசியல் மட்டுமல்ல சர்வதேச அரசியலில் கூட யதார்த்தம் என்பது வேறு. கோஷங்கள் போடுவது என்பது வேறு.

இந்தியாவை நம்பமுடியாது, நாங்கள் இந்தியா தவிர்ந்த மற்ற சர்வதேசத்தின் உதவியுடன் எங்களது இறைமையை மீட்டெடுக்க வேண்டும் என்று கோஷம் போடுவோர் எங்களிடையே உண்டு. இந்தக் கோஷங்களை கேட்டு பரவசமடையலாம்; ஆர்ப்பரிக்கலாம். ஆனால் அந்த சர்வதேசம் இதுவரை செய்ததென்ன? நாளையும் தம் நலன் கருதி அக்கறை படாதிருந்தால் என்ன செய்து? அத்தகைய சூழலில் அதைக் கையாள்வதற்கான உந்து சக்தியின் வளங்கள் நம்மிட முண்டா?

இந்தியாவை மாத்திரமே நம்பிக்கொண்டு, அவர்கள் செய்வதை, தருவதை எடுத்துக் கொண்டு தாளம் போடவேண்டுமென்று நான் சொல்லவில்லை. நாங்களே இந்தியாவுடன் முட்டி மோதி ஏற்படுத்திக் கொண்ட கசப்புணர்வுகளை நீக்கி, அவர்களை பங்காளியாக்கி கொள்ளும் நட்புறவை மேம்படுத்தி செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

இலங்கையை சர்வதே மனித உரிமை சபையிலிருந்து வெளியே எடுத்து, சர்வதேச குற்றவியல் மன்றுக்கு(ICC க்கு) பாரப்படுத்த வேண்டும் என்ற கோஷமே மேலோங்கி நின்றது. கட்சி தலைவர்கள் – சுமந்திரன் உட்பட – அதற்கான ஒரு மனுவைக் கூட்டாக வைத்தார்கள். அந்த எதிர்பார்ப்பையே எங்கள் சார்ந்த ஊடகங்களும் பெருமளவில் வளர்த்தன. இவை உடனடியான சாத்தியமற்றவை என்பதும் அதற்கான வழிமுறைகள் முதலில் அமைக்கப்படவேண்டும் என்பதும் இவர்கள் எல்லோருக்குமே தெரிந்துதான். ஆனால் கோஷங்கள் அவர்களுக்குத் தேவையாயிருந்தன. அதனை ஆதரித்து உண்ணாவிரதங்களும் நடந்தன.

ஆஸ்திரேலிய தமிழ் அகதிகள் சங்கம் மனித உரிமை பேரவைக்கு செய்த ஒரு சமர்ப்பணத்திற்கு எனது ஆலோசனைகள் இருந்தன. அவர்களது வரைவில், மனித உரிமை பேரவையை பின்வருவனவற்றை யதார்த்தமாக, செய்யவேண்டுமென்று கோரியிருந்தார்கள்.

1. மனித உரிமை சபையில் ஆணையாளர் உடனடியாக இலங்கையில் மனித உரிமை மீறல்களை, முக்கியமாக தமிழர், முஸ்லிம் மக்களின் இன அடையாளத்தை அழிக்க/ அன்றில் ஒடுக்கப்படும் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக ஒரு அலுவலகத்தை (**Human Rights Field Operation Unit**) ஏற்படுத்த வேண்டும்.

2. மனித உரிமை சபை உடனடியாக யுத்த குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்திற்கெதிரான நடவடிக்கைகளுக்காக இலங்கையில் நடைபெற்ற பல விசாரணைகளுக்கு கொடுக்கப்பட்ட ஆவணங்களையும் சாட்சியங்களையும் அரசாங்கத்திடமிருந்து பொறுப்பெடுத்து, அதனை இலங்கையிலும் ஜெனிவாவிலும் பாதுகாப்பாக வைத்தல் வேண்



டும்.

3. அங்கத்துவ நாடுகளினூடாக இலங்கைக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் மனுச் செய்ய முன்முயற்சி எடுத்தல் வேண்டும்.

4. ஐக்கிய நாடுகள் சபையின் 39 ஆம் சரத்தின் கீழ் இலங்கைகான ஒரு தனிப்பட பொறிமுறையை அமைக்கவேண்டும்.

5. சர்வதேச குற்றங்களை செய்தவர்களுக்கு எதிராக சர்வதேச நியாயாதிக்கத்தை அமுல் படுத்த வேண்டும்.

6. அங்கத்துவ நாடுகள் இந்தியாவுக்கு மேலதிக ஆதரவு தந்து, இலங்கை - இந்திய ஒப்பந்ததின் அடிப்படையில் அமைந்த அரசமைப்பு சரத்துக்களை அமுல்படுத்த வேண்டும். அதன் மூலம், என்றைக்குமில்லாவாறு மூர்கத்தனமாக ஆயுதப் படைகளின் பாதுகாப்புடன் இப்போது முன்னெடுக்கப்படும் காணி அபகரிப்பு, மத வழிபாட்டு தலங்கள், நினைவாலயங்கள் போன்றவை அழிக்கப்படுதல் என்பன உடனடியாக நிறுத்தப்படுவதற்கு ஆவன செய்யவேண்டும்.

அந்தச்சமர்பணத்தில், இந்தியா, தமிழர்களுக்கான பிரதிநிதியாக நின்று இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை நிறைவேற்றியது, ஆகவே அவற்றை நடைமுறைப் படுத்தும் கடமைபாடும் இந்தியாவில் 33 வருடங்களுக்கு மேலாக வசிக்கும் தமிழ் அகதிகளை அவர்களது பூர்வீக இடங்களில் உரிமையுடன், கௌரவத்துடன் மீள குடியமர்த்தும் பொறுப்பும் இந்தியாவிற்கு உண்டு என்று சொல்லியிருந்தார்கள். நிறைவேற்றபட்ட தீர்மானத்தையும், இந்தியாவின் உரையையும் கூட்டாக கணக்கெடுத்தால் நாங்கள் மனித உரிமை பேரவையில் இருந்து பெற்றுக் கொள்ள கூடியவையின் யதார்த்தங்கள் புரியும். அவையே நடைமுறையாகின்றன.

முன்னைய தீர்மானங்களுக்கும் இந்த தீர்மானத்துக்கும் உள்ள பாரிய வித்தியாசம் எதுவென்றால், முன்னயவற்றில் இலங்கை அரசாங்கத்தை சர்வதேச அனுசரணையுடன் ஒரு நியாமானதும் நம்பகமான முறையில் விசாரித்து உரிய நீதி வழங்க வேண்டும் என்பது இருந்தது. அதில் கடந்த நல்லாட்சி அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானத்தில் ஒரு சர்வதேச கலப்பு பொறுப்புக்கூறல் முறை நடைமுறைப்படுத்துவது என்று பொருந்திக் கொள்ளப்பட்டது. ஆனால் அது நடக்கவில்லை. அவையெல்லாவற்றையும் கணக்கெடுத்த சர்வதேசம் இந்தத்

> இந்தியாவை மாத்திரமே நம்பிக்கொண்டு, அவர்கள் செய்வதை, தருவதை எடுத்துக் கொண்டு தாளம் போடவேண்டுமென்று நான் சொல்லவில்லை. நாங்களே இந்தியாவுடன் முட்டி மோதி ஏற்படுத்திக் கொண்ட கசப்புணர்வுகளை நீக்கி, அவர்களை பங்காளியாக்கி கொள்ளும் நட்புறவை மேம்படுத்தி செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

தீர்மானத்தில், அதனை ஏற்படுத்த வேண்டிய நிர்வாகத்தை தன்கையில் எடுத்துக் கொண்டுள்ளது. இலங்கைக்கு அனுசரணையாக உதவிகள் செய்யவேண்டுமென்ற நிலையிலிருந்து அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அழுத்தத்தை கொடுக்க வேண்டிய பொறிமுறைகளை வகுக்கிறது.

அதனில் ஒன்றே இந்தியா கோரும் மாகாண சபையின் முழுமையான அதிகாரங்களோடு அமுல்படுத்தப்படவேண்டும் என்பதும்.

சுருங்க சொன்னால் செப்படி வித்தைகளின் கயிறு, ராஜபக்ஷவினரிடம் இருந்து மனித உரிமை பேரவையின் கைகளுக்குப் போயிருக்கிறது. அதற்காக தேவையான பணமும் கணக்கெடுக்கப்பட்டு ஆணையாளருக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆயினும், தமது ஆதரவு நாடுகளின் ஊக்கத்தினாலோ அன்றில் தங்களது உன்மத்த எண்ணங்களினாலோ ராஜபக்ஷ அரசு இந்தத் தீர்மானத்தை ஏற்கவில்லை, நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று முரட்டுப் போக்கில் அறிவித்துள்ளது.

அதற்கும் மேலாக, வெளிநாட்டு மந்திரி போர்க்குற்ற சம்பவங்கள் பற்றியோ மனித உரிமை மீறல் சம்பந்தமாகவோ எந்த ஆவணங்களும் கையளிக்கப்படமாட்டா என்று அறிவிக்கிறார்.

சரத் வீரசேகரவோ, மாகாண சபை முறை நீக்கப்படவேண்டும் என்று தான் மீண்டும் அரசுக்கு அறிவுறுத்துவேன், அது நடைமுறைக்கு வரும் என்கிறார்.

இந்த நிலைப்பாடுகளுக்கு எதிராக மனித உரிமை பேரவை என்ன நடவடிக்கை எடுக்கும், இந்தியா தனது ஆளுமையில் 13ஆம் சரத்தை நடைமுறைப் படுத்துமா, அன்றில் மனித உரிமை மீறல்களை கட்டுப்படுத்த வேண்டி வடக்கு, கிழக்கை தனது ஆளுமைக்கு கீழ் கொண்டு வருமா என்பவை எல்லாம் கேள்வி குறிகள். வெளிநாட்டுப் படைகள் வரலாம். குருசேத்திரத் தொடக்கமாகலாம் என்ற கருத்துக்கள் உண்டு. மகாபாரத்தில் தன் சேலை உரியப்பட்டு திரௌபதி, நீதி கிடைக்கும் வரை தான் தன் கூந்தலை மீள வாரமாட்டேன் என்று உணர்ச்சிப் பிழம்பாக சபதம் எடுத்தாள். அர்ஜுனனோ எதற்கும் ஆத்திரத்தில் பொங்கி காண்டீபம் எடுத்தான். வீமன் தன் தொடையையும் கதாயுதத்தையும் தட்டி கௌரவரை சின்னாபின்னப்படுத்துவேன் என்று நின்றான். அப்படி பாண்டவர் ஒவ்வொரும் துடித்தார்கள். ஆனால் அவர்களை வழி நடத்த ஒரு கிருஷ்ணன் இருந்தான். எல்லோரும் கட்டுப்பட்டு அடங்கிப்போக பொறுமைசாலியான தருமன் இருந்தான். எங்களில் எல்லோருமே நீதிக்காகத் துடிக்கிறோம். எம் வழியில் பயணம் வேண்டுமென்று கூவுகிறோம். ஆனால் ஒரு தருமரும், இந்தியாவுடனும் சர்வதேசத்துடனும் தூது போகக் கூடிய கிருஷ்ணனும்தான் எமக்கு அவசியம். அவர்கள் உடனடியாக உருவாகவேண்டும். அவற்றிற்காக இனி காலம் தாழ்த்துவது என்பது மடமைத் தனம்.

# இந்தியா நடுநிலை வகித்தமை ஈழத் தமிழர்களுக்கு வேதனை!

## கோவிந்தன் கருணாகரம் குற்றச்சாட்டு



பல நாடுகளைத் திரைமறைவிலிருந்து இயக்கிய இந்தியா நடுநிலை வகித்தமை ஈழத் தமிழர்களை வேதனைக்கு உட்படுத்தும் விடயம் என நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

எனவே, ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்திருக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பில், அவரது அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

இலங்கைக்கு எதிராக ஐ.நாவில் கொண்டுவரப்பட்ட பிரேரணை அமோக வரவேற்புடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

22 நாடுகள் பிரேரணைக்கு ஆதரவாகவும் 11 நாடுகள் எதிராகவும் 14 நாடுகள் நடுநிலையாகவும் வாக்களித்துள்ளன.

இந்நிலையில், இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சர் மீசையில் மண் ஒட்டவில்லையென்ற வகையில் கருத்துகளைத் தெரிவித்துவருகின்றார். 22 நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ள நிலையில் ஏனைய நாடுகள் எதிராகவுள்ளன எனக் காட்ட முற்படுகின்றனர்.

இலங்கை அரசாங்கமும் அவர்களின் அமைச்சர்களும் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாத நிலையிலேயே செயற்பட்டு வருகின்றனர்.

இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்ற நிலையில் பல நாடுகளைத் திரை மறைவிலிருந்து இந்தியா இயக்கியது.

இந்தப் பிரேரணை வெற்றிபெற வேண்டும், இலங்கையில் சிறுபான்மை இனத்தவர்கள் துன்புறுத்தப்படுகின்றனர், அவர்களுக்கு பூரண அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று கூறிய இந்தியா, இந்தப் பிரேரணையில் நடுநிலை வகித்தது ஈழத் தமிழர்களை வேதனைக்கு உள்ளாக்கிய விடயமாகவே தமிழர்கள் பார்க்கின்றனர்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகிய காலம் தொடக்கம் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள் இந்தப் பிரேரணையைக் கொண்டுவந்த நாடுகளைக் கடுமையாக இனவாத ரீதியில் விமர்சனம் செய்துவந்தனர்.

ஆனால், இறுதி நேரத்தில் இவர்கள் வாய்கள் அடைக்கப்பட்டு மௌனிகளாக்கப்பட்டார்கள். இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் பங்குபற்றியவர்கள் இங்குள்ள அமைச்சர்களை அடக்கிவாசிக்குமாறு கூறினர் எனவும் அறிகின்றோம்.

அந்தப் பிரேரணையின் கனதியை, அதனை ஆதரிக்கும் நாடுகளின் கனதியை, அடக்கிவாசிக்காவிட்டால் எதிர்காலத்தில் இலங்கையில் ஏற்படப்போகும் துரதிர்ஷ்டவசமான சம்பவங்களை நிறுத்துவதற்காக குறித்த வேசங்களைக் கக்கிய அமைச்சர்களை அடக்கிவாசிக்குமாறு கூறப்பட்டதும் அவர்கள் அடக்கிவாசித்ததும் எமக்கு சாதகமானதாகவே இருந்தது.

இன்றுகூட வெளியிறவுத்துறை அமைச்சர், மாகாணசபைத் தேர்தல் தொடர்பாகவும் 13ஆவது திருத்தம் தொடர்பாகவும் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாகவும் பேசுகின்றார் என்றால் ஐ.நா. தீர்மானத்தின் கனதியின் விளைவே அதுவாகும்.

மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் முடிந்ததன் பின்னர் சில வேளைகளில் இந்த அமைச்சர்கள் மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறியது போன்று செயற்படுவார்கள் என்பது நாங்கள் யாவரும் அறிந்த விடயமாகும். இருந்தபோதிலும் இலங்கை தொடர்பாக சர்வதேசம் கொண்டுள்ள நிலைப்பாட்டை இலங்கை புரிந்து நடக்கும் என்று நாங்கள் கருதுகின்றோம்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி தொடர்பாக அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கை அப்பட்டமான மனித உரிமை மீறலாகவே இருக்கின்றது.

ஜனநாயகப் போராட்டத்தில் பங்குபற்றியவர்களை அச்சுறுத்துவதும், சட்டத்தின்முன்பாகஅவர்களைநிறுத்துவதற்காக பொலிஸ் நிலையங்கள் ஊடாக நடவடிக்கைகள்முன்னெடுத்துநீதிமன்றத்தில்நிறுத்த முயற்சிகள் முன்னெடுப்பதும் அராஜகமான செயற்பாடாகவே நாங்கள் பார்க்கின்றோம். – என்று குறிப்பிட்டுள்ளார்.

## தனிமைப்படுத்தல் மீறிய ஐவர் கைது!



கடந்த 24 மணி நேரத்தில் தனிமைப்படுத்தப்பட்ட சட்டங்களை மீறி செயற்பட்ட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் மூவாயிரத்து 391 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பண்டிகை காலங்களில் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுவதன் ஊடாக கொரோனா ஆபத்தைத் தவிர்க்க முடியும் என சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

## ஐ.நாவில் தங்களின் கொள்கைகள் தோற்றமையை அரசு ஏற்கவேண்டும்!

அரசாங்கம் தனது பெருமையை ஒதுக்கி வைத்துவிட்டு, அவர்களின் கொள்கைகள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் தோற்கடிக்கப்பட்டன என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க, இந்த அரசாங்கம் தற்போது மனித உரிமைகளை பாதுகாக்க முன்வர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அதன்பிரகாரம் அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தை இரத்து செய்தல், இராணுவ மயமாக்கல் மற்றும் ஊடகங்கள் மீதான அடக்குமுறை ஆகியவற்றை முடிவுக்குக் கொண்டு வருதல் மற்றும் நாட்டின் அரசமைப்பின் படி ஆட்சி அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் பெரும்பான்மையை இழந்த நிலையிலும் அவர்களின் குறைபாடுகளை ஒப்புக்கொள்ள இலங்கை அரசாங்கம் தவறி விட்டதாகவும் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

## கஞ்சாவுடன் இளைஞன் வவுனியாவில் கைது!

வவுனியா, மார்ச் 26

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் கேரள கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த இளைஞர் ஒருவரை வவுனியா பொலிஸார் கடந்த புதன்கிழமை கைது செய்துள்ளனர்.

குறித்த பகுதியில் கஞ்சா விற்பனை இடம்பெறுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியில் சோதனை நடவடிக்கையை மேற்கொண்ட பொலிஸார், இளைஞர் ஒருவரின் பயண பொதியை சோதனையிட்டனர்.

இதன்போது பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 4 கிலோ 600 கிராம் எடையுடைய கேரள கஞ்சாவைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அதனை உடைமையில் வைத்திருந்தார்என்றகுற்றச்சாட்டின்அடிப்படையில் வவுனியாவைச் சேர்ந்த 30 வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் அவரை ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## களுத்துறை சிறைச்சாலைக்குள் வீசிய பொதியில் தொலைபேசி!

களுத்துறை சிறைச்சாலையின் மதிலுக்கு மேலால் வீசப்பட்ட தடை செய்யப்பட்ட பொருள்களடங்கிய பொதியை சிறைச்சாலையின் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர் என சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

களுத்துறை சிறைச்சாலையின் மதிலுக்கு மேலால் கடந்த புதன்கிழமை அதிகாலை 4.50 மணியளவில் , இனந்தெரியாத நபரொருவரால் பொதியொன்று வீசப்படுவதை அவதானித்துள்ள சிறைச்சாலை அதிகாரிகள் அந்த பொதியைக் கைப்பற்றியுள்ளனர். புற்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்த பொதியிலிருந்து , தொலைபேசி , மற்றும் 8 புகையிலை துண்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. குறித்த தடைச் செய்யப்பட்ட பொருள்கள் மேலதிக விசாரணைகளுக்காக களுத்துறை வடக்கு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

களுத்துறை பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## இன, மத பெயர்களில் கட்சிகளை பதிவு செய்ய அனுமதி இல்லை!

எதிர்காலத்தில், இனங்கள் மற்றும் மதங்களின் பெயர்களைக் கொண்ட அரசியல் கட்சிகளைப் பதிவுசெய்ய அனுமதிக்கப் போவதில்லை என தேசிய தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றினைவெளியிட்டுள்ளஆணைக்குழு, தற்போதுள்ள சட்டங்களின் அடிப்படையில், அரசியல் குழுக்கள் தேசியக் கட்சிகளாகப் பதிவு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய தேர்தல் ஆணைய உறுப்பினர்களின் கூட்டத்தின் போது இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும், தற்போதுள்ள பெயர்களைத் திருத்துவதற்கு இனங்கள் மற்றும் மதங்களின் பெயர்களைக் கொண்ட அரசியல் கட்சிகளுக்கு நியாயமான நேரத்தை வழங்கவும் ஆணையம் முடிவு செய்துள்ளது.

தேர்தல்சட்டத்தைமாற்றுவதற்கும், 18 வயதைஎட்டியவர்கள்அனைவரும் மூன்றுமாதங்களுக்குள்வாக்களிக்கத் தகுதியுடையவர்கள் என்பதை உறுதி செய்வதற்கும் வர்த்தமானி செய்யப்பட்ட திருத்தங்களை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கும் ஆணையகம் கவனம் செலுத்தியுள்ளது.

இதேவேளை, 1985ஆம் ஆண்டு முதல் வடக்கு மற்றும் கிழக்கில் மோதல் காரணமாக உயிரிழந்தவர்களை உறுதிப்படுத்துவது தேர்தல் ஆணையகத்தின் மற்றொரு தீர்மானம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இறந்தவரின் விவரங்கள் வர்த்தமானி செய்யப்பட்டு ஏப்ரல் 23 ஆம் திகதி வரை மாவட்ட செயலக அலுவலகங்களிலும் தேர்தல் ஆணையகத்தின்வலைத்தளத்திலும்காண்பிக்கப்படும்.

இதன்படி, பட்டியலில் தவறாகச் சேர்க்கப்பட்டுள்ளவர்களுக்கு ஆணையகத்தில் பதிவுசெய்ய வாய்ப்பு வழங்கப்படும் எனவும் மேலும் பெயர்கள் 2020 தேர்தல் பதிவேட்டில் சேர்க்கப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

### திராட்சையை தாக்கும் கீழ்ப்பூஞ்சண நோய்

**சேத அறிகுறி :**

1. இலையில் மஞ்சள்நிறப் புள்ளிகள் காணப்படும். அவை பின்னர் கபிலநிறமாக மாறி பின்னர் இறக்கும்.
2. பழக்குலை கபிலநிறமாக மாறி பின்னர் இறக்கும்.

**கட்டுப்பாடு :**

* பாதிக்கப்பட்ட இலைகளையும், காய்களையும் தாவரத்திலிருந்து அகற்றுதல்.
* Bordeaux mixture பயன்படுத்துதல்.
* சிபார்சு செய்யப்பட்ட பங்கசு நாசினி பயன்படுத்துதல்.

| | | |
|---|---|---|
| Propineb | 70% ... | 20g/10 l water |
| Manab | 80% ... | 20g/10 l water |
| Mancozeb | 80% ... | 20g/10 l water |
| Captan | 50% ... | 20g/10 l water |

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir

## கொழும்பு அரசின் பழிவாங்கல் ஆரம்பம்

# ஒரே நாளில் 54 இந்திய மீனவர்களை சிறைப்பிடித்தது இலங்கை கடற்படை





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச் 25

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி உள்நுழைந்த இந்திய மீனவர்கள் 54 பேர், 5 படகுகளுடன் இன்று காலை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் ஊடுருவும் நிலையில் கடந்த ஜனவரி மாதம் 18ஆம் திகதி நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் நுழைந்த ஒரு படகில் ஏற்பட்ட விபத்தில் 4 இந்திய மீனவர்கள் உயிரிழந்தனர். இதன் பின்பு இன்று காலை இரட்டைமடி இழுவைப் படகு ஒன்றில் இருந்து 14 மீனவர்கள் நெடுந்தீவுக்கு அன்மையிலும், கிளிநொச்சி, பூநகரி – இரணைதீவு கடற் பரப்புக்குள் நுழைந்த இரு படகுகளில் 20 மீனவர்களும் கைதுசெய்யப்பட்டனர் என்று கடற்படையினரால் தெரிவிக்கப்படுகின்றது.

இதேநேரம் முல்லைத்தீவு மாவட்ட கடல் எல்லைக்குள் நுழைந்த இரு படகில் 20 மீனவர்களுமாகவே மொத்தம் 54 இந்திய மீனவர்கள் இன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களின் விவரங்கள் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்க ளங்கள் ஊடாக நீதிமன்றத்துக்குச்சமர்ப்பித்து 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கான அனுமதி பெறப்படவுள்ளது.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் இந்தியா, இலங்கையை ஆதரித்து தீர்மானத்தை எதிர்க்கும் என்று கொழும்பு அரசு நம்பியிருந்தது. எனினும், தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் இந்தியா நடுநிலைமை வகித்திருந்தது. இது கொழும்புஅரசைகடும்சீற்றத்துக்குஉள்ளாக்கியுள்ளது. இதற்குப் பழிவாங்கும் வகையிலேயே ஒரே நாளில் 54 இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சிறைப்பிடித்துள்ளனர் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# வடக்கு உயர் அதிகாரிகள் பலர் தனிமைப்படுத்தலில்



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி சபைகளை நவீனமயப்படுத்தல் தொடர்பான இரண்டு நாள் ஆய்வரங்கில் பங்குகொண்ட வடக்கு மாகாணத்தின் அதி உயர் பதவிகளில் உள்ள அதிகாரிகள் தொடக்கம் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் வரையில் பெருமளவானவர்கள்தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு நிதி உதவியில் உள்ளூராட்சி சபைகளை நவீனமயப்படுத்தல் தொடர்பான ஆய்வரங்குயாழ்.திருநெல்வேலியில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் கடந்த 23, 24ஆம் திகதிகளில் நடைபெற்றது.

குறித்த விடுதியிலேயே 2 நாள்கள் அதிகாரிகள் தங்கியிருந்து ஆய்வரங்கில் பங்குகொண்டதுடன் விருந்துபசாரங்களிலும் பங்கேற்றனர்.

இந்நிலையில், நேற்றுகொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட யாழ்.மாநகர மேயர் வி.மணிவண்ணன் நேற்று முன்தினம் பிற்பகல் வரையில் குறித்த கூட்டத்தில் பங்குகொண்டதுடன் அங்கு பல்வேறு கலந்துரையாடல்கள் மற்றும் விருந்து பசாரத்திலும் பங்கேற்றிருக்கின்றார்.

குறித்த ஆய்வரங்கில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், உள்ளூராட்சி சபைகளின் ஆணையாளர்கள், தலைவர்கள், யாழ்.மாநகர ஆணையாளர் உட்பட்ட வடக்கின் உயர் அதிகாரிகள், வடக்கின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த வடக்கு மாகாண நிர்வாக சேவைக்கு உட்பட்ட அதிகாரிகள் எனப் பலர் பங்குபற்றினர்.

பிரதேச பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களால் குறித்த ஆய்வரங்கில் பங்குகொண்டவர்களை தனிமைப்படுத்தலில் இருக்குமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

# கைதான இந்திய மீனவர்களுக்கு உடன் தூதரக உதவி கிட்டுவதில் இடைஞ்சல்?

யாழ்ப்பாணம், மார்ச் 25

கைது செய்யப்பட்ட மீனவர் விவகாரம் மனிதாபிமான ரீதியில் அணுகப்பட வேண்டும் என்றும் தூதரகம் கோரியுள்ளது.

இது தொடர்பாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் அறிக்கை ஒன்றை இன்று முற்பகல் விடுத்தது.

நேற்றிரவுக்குப் பின்னர் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட 54 இந்திய மீனவர்களை சந்தித்து, அவர்களுக்கு யாழ் துணைத் தூதரகத்தின் சேவையை வழங்குவதில் இடைஞ்சல் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. அதையடுத்தே நாசூக்கான வார்த்தைகளில் அமைந்த அறிக்கை ஒன்றைத் தூதரகம் வெளியிட்டிருக்கின்றது எனவும் அறியவந்தது.

அந்த அறிக்கையின் சாராம்சம் வருமாறு:

24 மார்ச் இரவு ஐந்து படகுகளுடன் 54 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டிருக்கும் தகவல் தூதரகத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் விவகாரம் மனிதாபிமானத்துடன் அணுகப்பட வேண்டும் என்பதை மீள வலியுறுத்துகின்றோம்.

கைதான மீனவர்களுக்கு விரைந்து அவசர விநியோகங்களை வழங்குவதும், துணைத் தூதரக சேவைகளை எட்டச் செய்வதும் மிக முக்கியமான விடயங்களாகும்.

இந்த மீனவர்களுக்கு விரைந்து தூதரக சேவையை எட்டச் செய்வதற்கு நாம் இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டு காரியமாற்றி வருகின்றோம்.

மீன்பிடி விடயங்களை விரிவாக அணுகுவதற்கு இரு நாடுகளுக்கும் இடையிலான பொறிமுறை நடைமுறையில் உள்ளது.

இணைச் செயற்குழுக்களின் செயலாளர் மட்ட நான்காவது கூட்டம் கடந்த 2020 டிசெம்பர் 30 இல் மெய்நிகர் முறையில் நடைபெற்றமை நினைவு கூரத்தக்கது.

அந்தக் கூட்டத்தின் முடிவுகளின் தொடர் நடவடிக்கைகள் உடனடியாக விரைந்து முன்னெடுக்கப்பட வேண்டும். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாடு திரும்பும் இலங்கையர்களின்

# தனிமைப்படுத்தலுக்காக 10 ஹோட்டல்கள் அறிவிப்பு

கொரோனா 19 வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக மத்திய கிழக்கு உள்ளிட்ட நாடுகளில் இருந்து நாடு திரும்பும் புலம்பெயர் இலங்கைத் தொழிலாளர்களுக்கு இலவசமாக தனிமைப்படுத்தல் நிலையங்களை வழங்க தனியார் துறையில் 10 ஹோட்டல்கள் மற்றும் தனியார் விடுதிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைக்கு கொரோனா தடுப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி ஒப்புதல் வழங்கியுள்ளது என இலங்கை வெளி நாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான தனிமைப்படுத்தல் நிலையங்களாக வெலிகம, ஹிக்கடுவ, வாதுவ, திக்வெல்ல, நீர்கொழும்பு, அஹுங்கம மற்றும் தங்காலை ஆகிய இடங்களில் உள்ள ஹோட்டல்கள் மற்றும் தனியார் விடுதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் வெலிகம ஜகாபே ரிசோட், பெர டைஸ் பீச் மற்றும் நெப்சூன் ரிசோட், ஹிக்கடுவ ஹிக்கா எப்.என்.ஆர். மற்றும் கொரல் ரீப் கெஸ்ட், வாதுவ ப்ளூ ஸ்ப்ரிங்ஸ், திக்வெல்ல விலா ஜயனன்த, நீர்கொழும்பு கெடமரான், அஹுங்கம ஜயன்தி சர்ப் மற்றும் தங்காலை சென்டன் ரிசோட் உள்ளிட்ட ஹோட்டல்களில் வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பும் இலங்கையர்கள் சுய தனிமைப்படுத் தலை மேற்கொள்ள முடியும்.

இந்த தனிமைப்படுத்தல் நிலையங்களில் 5 லட்சத்து 71 ஆயிரம் நபர்கள் தனிமைப்படுத்தல் வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்தத் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கான வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் 18 லட்சம் ரூபாவை செலவிடுகின்றது எனத் தொழில்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்படி, மேலே குறிப்பிடப்பட்ட தனிமைப்படுத்தல் ஹோட்டல்களில் தங்கவைக்கப்படுகின்ற நபரொருவருக்காக நாளொன்றுக்கு 4 ஆயிரத்து 500 ரூபா பணம் செலவிடப்படுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே, ஹோட்டல் கட்ட ணங்கள், உணவு உள்ளிட்ட ஏனைய வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான கட்டண விவரங்களை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தடுப்பூசி ஏற்றுமதியை நிறுத்தியது இந்தியா!

## இலங்கைக்குப் பாதிப்பா? இராஜாங்க அமைச்சர் விளக்கம்

கொழும்பு, மார்ச் 25

இந்தியாவில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றுமதி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள போதிலும் முன்பதிவு செய்யப்பட்டுள்ள தடுப்பூசிகள் தாமதமின்றி இலங்கையை வந்து சேரும் என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

உள்நாட்டில் தடுப்பூசிக்கான தேவை அதிகரித்துள்ளதால், ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் பணிகளை எதிர்வரும் ஏப்ரல் இறுதி வரை இந்தியா தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

இந்தநிலையில், இலங்கைக்கு தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளவதில் சிக்கல் ஏற்படுமா என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில், இலங்கைக்குத்தடுப்பூசிகள் பெற்றுக்கொடுக்கப்படும் என இந்தியா உறுதியளித்துள்ளது என சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அதன்படி, இலங்கையால் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்காக முன்பதிவு செய்யப்பட்டுள்ள 10 லட்சம் தடுப்பூசிகள் தாமதமின்றி இலங்கையை வந்து சேரும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வீட்டுத்திட்டம் வழங்கலில் மட்டக்களப்பில் பாரபட்சம்!

## இரா.துரைரெத்தினம் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு மாவட்டத்தில் வீடு வழங்குவதற்காகத் தெரிவு செய்யப்படும் பயனாளிகள் கட்சி சார்ந்தவராக இருக்க வேண்டுமா என முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர், ஈ.பி.ஆர்.எல்.எப். (பத்மநாபா அணி) இரா.துரைரெத்தினம் கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா. துரைரெத்தினம் கடந்த புதன்கிழமை ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்த அவர் கூறியவை வருமாறு –

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பதின்னான்கு பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள ஒவ்வொரு கிராமத்துக்கும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட, இடம்பெயர்ந்த, வறுமைக் கோட்டுக்குள்ளாக்கப்பட்ட வர்கள் என்னும் அடிப்படையில் சில வருடங்களாக ஆண்டு தோறும் கிராமத்திற்கு ஒரு வீடு என்னும் திட்டம் அமுல்படுத்தப்பட்டுக் கொண்டு வருகின்றது.

கிராமங்களில் தெரிவு செய்யப்படும் பயனாளிகள் அரசியற்கட்சி சார்ந்தவராக இருக்க வேண்டுமா? இந்தக் கொள்கையை ஒரு சில பிரதேச செயலகப்பிரிவுகளில் உள்ள சில உத்தியோகத்தர்கள் அமுல்படுத்துகின்றார்களா? அப்படியாயின் அரச நிர்வாகக் கட்டமைப்பு முறையொன்று தேவையில்லை.

மாவட்டத்திலுள்ள அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்கள்



மிகவும் அர்ப்பணிப்புடனும், நேர்மையுடனும், சமூக நலனோடும் சரியான கொள்கைகளை அமுல்படுத்தி வருகின்றமை நான் அறிந்த விடயமே. ஆனால் ஒரு சிலரை ஒரு சிலர் நிர்ப்பந்திக்கக் கூடாது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட, இடம்பெயர்ந்த. வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழுகின்ற மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் சில நாடுகள், சில நிறுவனங்களிடமிருந்து பெறுகின்ற நிதியிலிருந்தும், இந்த அரசின் மக்களின் வரிப்பணத்திலிருந்தும் வழங்கப்படுகின்றது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த வளங்களும், நிதியும் தனிப்பட்ட நபர்களினதோ, அரசியற் கட்சியினதோ நிதிகள் இல்லை என்பதை புரிந்துகொண்டு பயனாளிகளை தெரிவு செய்யும் போது சரியான கொள்கைகளை அமுல்படுத்துமாறு அரசாங்க அதிபர், தேசியவீடமைப்பு அபிவிருத்தி, அதிகாரசபை, பிரதேச செயலாளர் போன்றோர்களுக்கு விரிவான கடிதத்தை அனுப்பி வைத்துள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மக்கள் இலக்கியவாதி.....

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

ஸ்ரீநிவாசன் இலங்கைக்கு வருகை தந்தபொழுது தமிழக கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியனும் பாரதி நூற்றாண்டு விழாவுக்கு வந்திருந்தார். இவர்கள் கலந்துகொண்ட விழா பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அமைச்சர் இராஜதுரை தலைமையில் நடந்தது.

அன்றைய விழாவில் ஈழத்தின் பிரபல நடன நர்த்தகி கார்த்திகா கணேசரின் பாரதி சம்பந்தப்பட்ட நாட்டிய நாடகம் கவிஞனின் கனவு அரங்கேறியது. அதற்கு இசையமைத்தவரும் ஸ்ரீநிவாசன்தான்.

எம்.பி. எஸ். என்று இந்திய திரையுலகில் பேசப்பட்ட இவர் பெங்களூரில் சுமார் மூவாயிரம் இளம் பிள்ளைகளை ஒரே சமயத்தில் பாரதி பாடல்களை பாட வைத்து அதற்கு பின்னணி இசை வழங்கி சாதனை புரிந்தவர். பாரதியிடத்தில் அவருக்கிருந்த ஆழ்ந்த பற்றுதலும்கூட இலங்கை அரசு அவரை அழைத்தமைக்கு பிரதான காரணமாகவும் கருதலாம்.

இந்தப்பிரபல இசையமைப்பாளர் நீர்வை பொன்னையனின் நல்ல நண்பர். அன்றையதினம் அவருக்கு எமது முற்போக்கு எழுத்தாளர் சங்கப் பிரதிநிதிகளையும் அறிமுகப்படுத்திய நீர்வை, எம்மை அழைத்துக் கொண்டு பம்பலப்பிட்டியில் அவர் தங்கியிருந்த விடுதியில் சந்திப்புக்கும் ஏற்பாடு செய்தார்.

இந்திய இசையுலகில் பெரிய ஆளுமையான ஸ்ரீநிவாசன் 1988 இல் இலட்சத்தீவுக்குப் பயணம் மேற்கொண்டபொழுது அங்கு மரணமடைந்தார்.

ஸ்ரீநிவாசன் பற்றிய நினைவுப்பதிவை நீர்வை எழுதினாரா..? என்பது குறித்த தகவல் இல்லை. தேர்ந்த கலை, இலக்கியவாதிகளுடன் தொடர்புகளைப் பேணிய நீர்வை பொன்னையனுக்கும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலிருந்த சில மூத்த எழுத்தாளர்களுக்கும் இடையில் அடிக்கடி உரசலும் உராய்வும் உறவும் மாறி மாறி தொடர்ந்தாலும் சங்கத்தின் செயலாளர் பிரேம்ஜி, தலைமைக்குழு உறுப்பினர் பேராசிரியர் கைலாசபதி ஆகியோரின் அன்புக்கும் மரியாதைக்கும் உரியவராகத் திகழ்ந்தவர்.

ஒரு சமயம் தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் மூர்த்தி (இவர் டானியல் பிரான்ஸில் வதியும் வி.ரி. இளங்கோவன் ஆகியோரின் தோழர்) இலங்கை வந்திருந்த பொழுது சங்கம், சோமகாந்தன் இல்லத்தில் ஒரு மாலை வேளையில் தேநீர் விருந்து பசாரத்தை வழங்கியது. நானும் நீர்வையும் சோமகாந்தனும் பிரேம்ஜியும்

மாணிக்ஸும் சந்திரசேகரம் மாஸ்டரும் அதில் கலந்துகொண்டோம்.

தொடக்கத்தில் கலந்துரையாடல் இயல்பாகவே தொடர்ந்தது. ஆனால், நேரம் செல்லச்செல்ல வாக்குவாதம் சூடுபிடித்தது. குரல்கள் உரத்து ஒலித்தன. திருமதி பத்மா சோமகாந்தன் அனைவரையும் அமைதிப்படுத்த முயன்றார். இறுதியில் கருத்து மோதல்கள் கருத்து மோதல்களாகவே தணிந்தன. விவாதம் இரவு எட்டு மணிக்கு மேலும் தொடர்ந்தது.

நீர்வை, தனது கருத்துக்களை அழுத்தம் திருத்தமாகவே சொன்னார். தஞ்சை மூர்த்தியும் அவரும் கருத்தியலில் மாறுபட்டிருந்தாலும் இடதுசாரி சிந்தனை கொண்டிருந்தவர்கள்தான்.

அப்பப்பா…… இடசாரிகளிடம்தான் எத்தனை பிளவுகள்…? எத்தனை கோலங்கள்….?அன்று நான் அவர்களின் உரத்தகுரல் கேட்டே களைத்துவிட்டேன். எனினும் அவர்கள் நாகரிகமாகவே தத்தமது வார்த்தைகளை வெளிப்படுத்தியமை முன்மாதிரியாக இருந்தது. நீர்வை, கொழும்பில் விபவி சுதந்திர இலக்கிய மாற்றுக் கலாச்சாரமையம் என்ற அமைப்பிலும் முற்போக்கு கலை, இலக்கிய மன்றத்திலும் இணைந்திருந்தவர். விபவி என்ற அமைப்பு பல கருத்தரங்குக ளையும் இலக்கியப் போட்டிகளையும் நடத்தி சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கியிருக்கிறது.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தளர்வுற்றவேளையில் அதனை மீளக்கட்டியெழுப்பவும் பாடுபட்டார்.

அவரது முயற்சிகள் பலிதமாகவில்லை என்பதும் தெரிகிறது. எப்பொழுதும் பொது அமைப்புகளுக்கு நிருவாகக் கட்டமைப்பு அவசியம். நிருவாகக்கட்டமைப்பு இல்லாத எந்தவொரு அமைப்பும் காலப்போக்கில் குலைந்துவிடும்.

அதன் பின்னர் அவற்றின் நீண்ட நாள் அங்கத்தவர்களே ஒருவரை ஒருவர் குறை கூறிக்கொண்டு பழிகளை ஒருவர் மீது ஒருவர் சுமத்தி காலத்தை கடத்தி விடுவார்கள். இவ்வாறு தேங்கிப்போன பலகலை இலக்கிய அமைப்புகள் இலங்கையில் மட்டுமல்ல தமிழர் புலம்பெயர்ந்த வெளிநாடுகளிலும் பெயரளவில் இருக்கின்றன.

இலங்கையிலும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திற்கு நேர்ந்ததும் அதுதான். எனினும், நீர்வை பொன்னையன் ஒரு கட்டமைப்பான நிருவாகத்தையே விரும்பியவர். இயங்காத அமைப்புக்கு சேலைன் ஏற்றி நேரத்தை வீணடிக்காமல் தமது நண்பர் முகம்மது சமீமுடன் இணைந்து முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் நீட்சியாக இலங்கை முற்போக்கு கலை, இலக்கிய மன்றத்தை உருவாக்கினார்.

இந்த அமைப்பு குறுகிய காலத்தில் பல ஆக்கபூர்வமான பணிகளை முன்னெடுத்திருக்கிறது.

27 நூல்களை மும்மொழிகளிலும் பல்துறை சார்ந்து வெளியிட்டுள்ளது. 'ஈழத்து முற்போக்கு சிறுகதைகள்' என சுமார் 25 சிறுகதைகளை தேர்வு செய்து நூலாக்கியிருக்கிறது. முற்போக்கு இலக்கியத் தடத்தில் 'புனைகதைச் சுவடுகள்', 'கவிதைச் சுவடுகள்' முதலான இரண்டு தலைப்புகளில் ஆய்வு நூல்களையும் வரவாக்கியுள்ளது.

இந்த அமைப்பு சில வருடங்களுக்கு முன்பு மூத்த முற்போக்குஎழுத்தாளர்களின் வாழ்வையும் பணிகளையும் கௌரவிக்கும் நோக்கத்துடன் கொழும்பில் விழா எடுத்தது.

நீர்வை பொன்னையனிடம் சில சிறப்பியல்புகளும் உண்டு. எவருடனும் சமரசம் செய்துகொண்டு இலக்கியச்சோரம் போகமாட்டார். தனது கருத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்.

நீர்வை பொன்னையன், தனது எண்பத்தியைந்து வயதுக்குப் பின்னரும் தொடர்ந்து சிறுகதைகள் எழுதியவர். நீர்வை பற்றிய இந்த நினைவுப் பதிவினை எழுதும்பொழுது ஒரு வேடிக்கையான உண்மையையும் இங்கே குறிப்பிடுதல் பொருத்தமாக இருக்கும்.

சுமார் அரை நூற்றாண்டு காலமாக அயர்ச்சியின்றி எழுதிய நீர்வை, விருதுகளுக்காவோ பொன்னாடை பூமாலைகளுக்காகவோ வெற்றுப் புகழாரங்களுக்காகவோ ஏங்கி நின்றவர் அல்லர். அங்கீகாரத்திற்காக அலைந்தவருமில்லை. மக்கள் இலக்கியவாதிக்குரிய அனைத்து அடையாளங்களுடனும் தனது பணிகளைத்தொடர்ந்தவர்.

அவரது அமைதியே அவரது ஆளுமை.

## மேலும் மூவர் மரணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த, 64 வயதான ஆண் ஒருவரும், கண்டி பிரதேசத்தைச் சேர்ந்த, 64 வயதான ஆண் ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 557 ஆக அதிகரித்துள்ளது.

## தனியார் வகுப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்.மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்கள் அனைத்திலும் கல்விச் செயற்பாடுகள் மறு அறிவித்தல் வரும் வரை தடை செய்யப்பட்டுள்ளது.

தரம் 5 புலமைப்பரிசில் வகுப்பு, ஜி.சீ.ஈ. சாதாரண தர வகுப்பு மற்றும் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு என்பவை மட்டும் முன்னெடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர்ந்த ஏனைய வகுப்புகள் நடத்துவதற்கு மறு அறிவித்தல் வரும்வரை தடை விதிக்கப்பட்டுள்ளது – என்றார்.

## பாதிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார்.

ஜெனிவாக் கூட்டத் தொடரில் இலங்கை மீதான தீர்மானம் குறித்து வெளிவிவகார அமைச்சின் விசேட அறிவிப்பை அமைச்சர் தினேஷ் குணவர்தன நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பித்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஐ.நா. தீர்மானத்தை அமுல்படுத்த அதிகமான நிதி செலவழிக்கப்படவுள்ளது. அது பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக செலவழிக்கப்பட்டால் ஆரோக்கியமாக இருக்கும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபை பாரிய நிதி நெருக்கடியில் இருக்கும்போது, மில்லியன் கணக்கான அமெரிக்க டொலர்களைச் செலவழித்து பொறிமுறைகளை நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றது.

இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த இந்த நிதி பயன்படுத்தப்பட வேண்டும்.

யாழ்.குடா நாட்டில் ஆயிரக்கணக்கான வீடுகளை நிர்மாணிக்கவும், யாழ்ப்பாணம் உட்பட ஏனைய பகுதிகளுக்குக் கொரோனாத் தடுப்பூசி ஏற்றவும் ஐ.நா. தீர்மானத்தை அமுல்படுத்தும் நிதி பயன்படுத்தப்பட வேண்டும் – என்றார்.

## கைதியைப் பார்க்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பார்வையிட அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

யாழ் மாவட்டம் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் கேவில் கிராமத்தில் வசித்து வந்த முன்னைநாள் வடமராட்சி கிழக்கு பிரஜைகள் குழுவின் செயலாளரும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வடமராட்சி கிழக்குச் செயற்பாட்டாளருமான செல்வராசா உதயசிவம் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கடந்த 2020 மார்ச் 04 ஆம் திகதி கைது செய்யப்பட்டு தொடர்ச்சியான விசாரணைக்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றார். அவரது விடுதலைக்கு உதவுமாறு அவரது குடும்பத்தினர் கோரிவரும் நிலையில் உதயசிவம் விடத்தை வலியுறுத்தி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கடந்த வருடம் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டதுடன், அவரது விடுதலையை வலியுறுத்தி நாடாளுமன்றிலும் உரையாற்றியுள்ளதாகவும், நீதி அமைச்சின் ஆலோசனைக் கூட்டங்களிலும் வலியுறுத்தப்பட்டதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கில் சட்டவிரோத மணல்கொள்ளை மற்றம் போதைப்பொருள் கடத்தல், சட்டவிரோத மீன்பிடி என்பவற்றிற்கு எதிராக உதயசிவம் தீவிரமாக செயற்பட்டுவந்தவர். மேற்படி செயற்பாடுகளால் புலிகளை மீளவும் உருவாக்க முற்பட்டார் எனப் பொய்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் என்றும் இது திட்டமிட்ட பழிவாங்கல் நடவடிக்கை என்றும் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

# 30 வருட போர் பாதித்த மக்களுக்கு நீதி கிடைக்குமென்பது நம்பிக்கை!

## ஏற்பட்டுள்ளது என்கிறது சர்வதேச மன்னிப்புச் சபை

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டிருக்கும் புதிய தீர்மானம் 30 வருட காலப் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி வழங்கப்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், புதிய தீர்மானத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் முன்வர வேண்டும் என்றும் அந்தச் சபை வலியுறுத்தியுள்ளது.

அதேவேளை, அதிலிருந்து தவறும் பட்சத்தில் மனித உரிமைகள் பேரவையால் சுயாதீனமான பொறுப்புக்கூறல் பொறிமுறையொன்று நிறுவப்படக்கூடும் என்றும் அந்தச் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட 46/1தீர்மானம்கடந்தசெவ்வாய்க்கிழமை 11 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக அறிக்கை வெளியிட்டுள்ள சர்வதேச மன்னிப்புச் சபை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டிருக்கும் புதிய தீர்மானம் மிக முக்கியமான முன்நகர்வு என தெரிவித்துள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் இந்தத் தீர்மானத்தின் ஊடாக சர்வதேசத்தின் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படுவதாகவும் அந்தச் சபை தெரிவித்துள்ளது.

அதுமாத்திரமன்றி, நீதியையும் பொறுப்புக்கூறலையும் நிலைநாட்டுவதற்கான ஆதாரங்களை ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் திரட்டுவதற்கும் வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கடந்த காலத்தில் இடம்பெற்ற மற்றும் தற்போது இடம்பெறும் மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் தொடர்ந்தும் தண்டனைகளில் இருந்து தப்பிக்கும் நிலை தொடர்வதற்கு அனுமதிக்க முடியாது என்ற சமிக்ஞை இந்தத் தீர்மானத்தின் ஊடாக தெளிவாக வெளிப் படுத்தப்பட வேண்டும் என அந்தச் சபை வலியுறுத்தியுள்ளது.

இந்தத் தீர்மானத்தின் ஊடாக இலங்கையின் மனித உரிமை நிலைவரங்கள் கண்காணிக்கப்படுவதுடன், கடந்தகால மீறல்கள் தொடர்பான ஆதாரங்களும் திரட்டப்படும் என்றும் சர்வதேச மன்னிப்புச்சபை அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.


Anna EXPRESS Courier Services
அண்ணா
விரைவும் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
லண்டன் ⇨ 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்
யாழ்ப்பாணம் சங்கத்தானை கனகராயன்குளம்
சங்கானை பளை மல்லாவி
கல்வியங்காடு கிளிநொச்சி மன்னார்
ஆவரங்கால் புதுக்குடியிருப்பு வவுனியா
நெல்லியடி முல்லைத்தீவு கொழும்பு


# ஊடகங்களை ஜனாதிபதி அச்சுறுத்தவில்லையாம்!

## கெஹலிய வக்காலத்து



கொழும்பு, மார்ச் 26

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கவில்லை. ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்களின் செயற்பாடுகள் தொடர்பிலேயே தனது நிலைப்பாட்டை வெளியிட்டிருந்தார் என்று அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்களின் செயற்பாடுகள் தொடர்பிலேயே அண்மையில் ஜனாதிபதி கருத்துக்களை தெரிவித்திருந்தார்.

இதனை ஊடகவியலாளர்களுக்கோ அல்லது அதனுடன் தொடர்புடையவர்களுக்கோ அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக கருத முடியாது.

ஜனாதிபதியால் கூறப்பட்ட கருத்துக்கள் திரிபுபடுத்தப்பட்டு வெளியிடப்படுகின்றன. எனவே இது தொடர்பில் ஊடகவியலாளர்கள் வீணாகக் குழப்பமடையத் தேவையில்லை.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நாலக கழுவேவா தனிப்பட்ட காரணத்துக்காகவே பதவி விலகியுள்ளார். தொழிற்துறையில் அடுத்த கட்ட நகர்வுகளை நோக்கிச் செல்வதற்கான வாய்ப்புக்கள் அவருக்கு கிடைக்கப்பெறும் போது அதற்கு நாம் இடமளித்துள்ளோம். - என்றார்.

# இலங்கைக்கு எதிரான வாக்களிப்பு நாட்டின் தோல்வியை எடுத்துக்காட்டு!

கொழும்பு, மார்ச் 26

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இடம்பெற்ற வாக்கெடுப்பு நாட்டின் தோல்வியை எடுத்துக்காட்டுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர் -

நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படும் போது, ஒரு குறிப்பிட்ட தரப்பு வாக்களிப்பதைத் தவிர்ப்பது, அவர்கள் ஆதரவாகவோ அல்லது விடயத்திற்கு எதிராக வாக்களிப்பதாகவோ கருதப்படுவதில்லைஎன்றும்சுட்டிக்காட்டினார்.

இந்தியா போன்ற ஒரு நாடும் ஜப்பான், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளுக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை என்பதும் அவர்கள் படிப்படியாக இலங்கையை எதிர்க்கின்றனர் என்பதை காட்டுவதாகவும் குறிப்பிட்டார்.


Global Access Employment
எமது நிறுவனம் வழங்கும் மகிழ்ச்சியான செய்தி கனடா நாட்டிற்கு செல்வதற்கு
- 13 - 15 (Gr 8- Gr10) வயது பாடசாலை மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் English medium இல் கல்வி கற்றிருக்க வேண்டும்.
- மேலும் 21 வயதிற்கு மேற்பட்டவர்களுக்குமான ஓர் அரிய சந்தர்ப்பம்
  - நீங்கள் A/L பரீட்சையில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.
  - உங்களிடம் ஆங்கில அறிவு இருக்க வேண்டும்.
  - பல்கலைக்கழக மாணவர்கள், பட்டம் பெற்றவர்களுக்கு அதிகமான வாய்ப்புக்கள்.
  - IELTS have most welcome.

இடைத்தரகர்கள் தேவையில்லை நேரடியாக தொடர்பு கொள்ளவும் உங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி. Serious inquiries only
0213150148, 0764804482


# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 30 | 24 |
| 03 | 03 |
| 1956 | 2021 |

## கனகசபாபதி தவேந்திரன் (தவே)

யாழ்.நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி தவேந்திரன் அவர்கள் நேற்றுமுன்தினம் (24.03.2021) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - நாகரத்தினம் (மாணிக்கம்) தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் விசாகரத்தினம் (ராசன்), கருணானந்தன் (தோமஸ் - பிரான்ஸ்), தர்மதேவி (செல்வம் - அவுஸ்ரேலியா), நகுலேந்திரன் (சூட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோகநாதன் (அவுஸ்ரேலியா), கலாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுதர்சினி (அவுஸ்ரேலியா), திருவுளன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவகுலன், கஜேந்திரன், திபேந்திரன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

71/17 இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் குடும்பத்தினர்.
தொடர்புகளுக்கு:-021 222 1594

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.03.2021 இல் வெளியிடப்பெற்றது.